# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

செப்டம்பர் 2005 ஜீவியம் 12 மலர் 5

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| எங்கள் குடும்பம் II | 3 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 38 |
| அஜெண்டா | 42 |
| லைப் டிவைன் | 44 |
| அன்பர் கடிதம் | 50 |
| சாவித்ரி | 52 |
| ரிக்ஷா மாரி | 54 |
| லைப் டிவைன் - கருத்து | 60 |
| ஜீவியாஞ்சலி | 62 |
| *What is Spirituality in Daily Life?* | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

- ✡ முழுமை முக்கியம், அளவு இல்லை.
- ✡ தீமையான மனம் தீய சக்திகளைவிடத் தீமை-யானது.
- ✡ தனிமையும், விரக்தியும், சலிப்பும் அறியாதது உள்ளொளி.
- ✡ குறை நிறைவாவது சமர்ப்பணம்.
- ✡ தர்மத்தையும், நியாயத்தையும் கடந்த அன்னை சட்டம் தெரியுமா?
- ✡ குறிப்பறிந்து செய்வது சேவை. இட்ட வேலையைச் செய்வது கூலி வேலை.
- ✡ நண்பன் நட்புக்கு உரிய-வனாவது அன்பு அருளாகும் தருணம்.

இம்மாதச் செய்தி

# குறை காணும் மனம் நிறைவு பெறாது.



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**கணவருடைய வாழ்வில் மனைவியாய், பையனுடைய வாழ்வில் தாயாராக இருக்கிறேன்.**
**அதற்குரிய வேலையை உள்ளே செய்யலாம்;**
**முடியும் நேரத்திலும் அதையெல்லாம் வக்கீலே செய்வது தவறு;**
**பையனைக் கல்லூரிக்கு அனுப்பினால் படிப்பது அவன் பங்கு:**

- ✡ **காது கேட்காதவருக்குக் கண் கூர்மையாக இருக்கும். பார்வையற்றவருக்குக் காது கூர்மையாக இருக்கும். காதால் கண் வேலையைச் செய்யமுடியும்என்றாலும் கண் தன் வேலையைச் செய்ய வேண்டும். நம் நாட்டில் கூட்டுக்குடும்பத்தில் பிரியம் காரணமாக ஒருவர் வேலையை அடுத்தவர் செய்கிறோம்.**
  - ❀ **அது அழகு, பண்பு, உயர்ந்தது.**
  - ❀ **அதன் எதிர்ப்புறம் உண்டு. சோம்பேறி இக்காரணத்தால் தன் வேலையை யாராவது செய்யவேண்டும்என எதிர்பார்க்கிறான். அது நாடு உருப்படாத மனப்பான்மை. அது கடன்படச் சொல்லும்.**
- ✡ **மனைவி மற்றவர் பொறுப்பை ஏற்பதைக் காண்பவர்கள் தங்களுக்காக அவரே தங்கள் கடமையைச் செய்யவேண்டும்என நினைக்கிறார்கள்.**
  - ❀ **பிறருக்காகச் சில காரியங்களைச் செய்யலாம், சில காரியங்களைச் செய்ய முடியாது.**
  - ❀ **பிறருக்காக மருந்து சாப்பிடமுடியாது, படிக்கமுடியாது, மெய் அவர்கள் சார்பாக மற்றவர் சொல்லமுடியாது.**
  - ❀ **நம் கடமையைப் பிறர் செய்யவேண்டும்என்பது தரித்திரமான நினைவு.**

✡ **இதன் தத்துவம் என்ன?**

- ❀ *பரமாத்மா பல்லாயிரம் ஜீவாத்மாவாயிற்று.*
- ❀ *பரமாத்மா பிரபஞ்சத்தில் மொத்தமாக வளரமுடியாதுஎன்பதால் பல ஜீவாத்மாக்களாகி, வளர முயன்றது.*
- ❀ *பரமாத்மா ஜீவாத்மாவானது வளர்வதற்காக.*
- ❀ *ஒவ்வொரு ஜீவாத்மாவும் தனித்தனியே வளர்ந்து சேர்வது பரமாத்மா வளர்வதற்காக.*
- ❀ *ஜீவாத்மாஎன்பது மனிதன். வளர்வதற்காக மனிதன் சிருஷ்டிக்கப் பட்டான்.*
- ❀ **அதுவே சிருஷ்டியின் நோக்கம்எனில் தம் வேலையைப் பிறர் செய்யவேண்டும்என்பது தலைகீழாக இருக்கிறது.**
- ❀ **கடன் மக்கள் வாழ ஏற்பட்டது. கடனை மனிதன் தன்னை அழிக்கப் பயன்படுத்தினால், மனிதன் சத்தாக மாறுவதற்குப் பதிலாக அசத்தாவான்.**
- ❀ **அதுவும் சிருஷ்டிக்கு ஆட்சேபணையில்லை.**
- ❀ **எது வேண்டும் - choice - என்பதை நிர்ணயிக்கும் சுதந்திரம் மனிதனுக்குண்டு.**
- ❀ **பிறர் செய்தால் தேவலைஎன்பவன் தனக்குள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தித் தன்னை அழித்துக்கொள்பவன்.**
- ❀ **சிருஷ்டிக்கு அழித்தலும், ஆக்கலும் ஒன்றுஎன்பதைப் போற்றுபவருக்கு அதுவும் சரி.**

**எப்பொழுது கையெழுத்திடலாம்எனக் கேட்கிறார்கள்;**
**நமக்கு அருள் பேரருளாக இருப்பதால் முடிவு எடுத்தவுடன் காரியம் முடிகிறது;**
**மனம் சோம்பேறியானால் 3 நாள் பிரார்த்தனையைச் செய்து முடிக்கவேண்டும்;**



**நானே சமர்ப்பணம் செய்தால்? - கணவர்;**
**வேண்டாவெறுப்பாக ஏற்பதை விருப்பாக ஏற்றால் மூச்சுத் திணறாது:**

✡ **கர்மம், அருள், பேரருள் என்பவை என்ன?**

✡ ***Force சக்தியின் செயல் கர்மம்.***

✡ ***Being ஜீவனின் செயல் அருள்.***

✡ ***பேரருள்என்பது இருவகைகள்: 1) ஜீவன் தானே முனைந்து செய்வது, 2) Being of the Becoming செயல்படுவது.***

✡ **பம்பாய் கம்பனி வேறொரு கம்பனியிடமும் தொடர்புகொண்டுள்ளது எனக் கேள்விப்பட்டு மனம் சஞ்சலப்பட்டபொழுது கணவர் 3 நாள் பிரார்த்தனையை மேற்கொள்ள முடிவுசெய்தவுடன் எப்பொழுது கையெழுத்திடலாம்எனக் கேட்கிறார்கள்.**

- ❀ **பார்ட்னர், கணவர், மனைவி, இவர்கள் மனம் நிலையாக இருப்பது, ஊசலாடுவது ஆகியவை புறநிகழ்ச்சியை நிர்ணயிக்கின்றன.**
- ❀ **கணவருக்குமட்டுமே சஞ்சலம்.**
- ❀ **புறநிகழ்ச்சி நம்மை நிர்ணயித்தால் நாம் forceஇல் இருக்கிறோம். புறநிகழ்ச்சி நம்மை நிர்ணயிக்காவிட்டால் நாம் ஜீவனில் இருக்கிறோம்.** ***நாம் எங்கிருக்கவேண்டும்என்பதை நாமே நிர்ணயிக்கிறோம்.*** **நிர்ணயிக்க முடியாதவருக்குப் பிரார்த்தனை தேவை. பார்ட்னர் உறுதியாகவும், தாயார் நிலையாகவுமிருப்பதால் கணவர் ஊசலாடினாலும், ஒவ்வொரு முறையும் நல்ல முடிவுக்கு வருகிறார். கணவர் நிலையற்ற நீர்க்குமிழி. ஆனால் எதிரானவர் இல்லை.**
- ❀ **பார்ட்னருக்கில்லாத அதிர்ஷ்டம் கணவர்மூலமாக வருகிறது. தாயார் தமக்குள்ள பக்தி, நம்பிக்கையைக் கணவர்மூலம் பூர்த்தி செய்தால் அவர் இன்று அவருக்கில்லாத இடத்திலிருந்து அவருக்குரிய இடத்திற்குப் போவார். அதற்குரிய கருவி கணவர், அவர் மனம்.**

❀ காரியம் முடிந்தபின் பிரார்த்தனை தேவையா? தெளிவானவர்க்குத் தேவையில்லை.

❀ மூச்சுத் திணறுவது மனம் இசையாததால்.

❀ மனம் ஈடுபட்டுச் செய்யும் காரியம் திணறாது.

❀ நம் கட்சி தோற்கவேண்டும்என வேலை செய்பவன் மனம் புழுங்குகிறது. அவன் நம் கட்சி ஜெயிக்கவேண்டும்என மாறிக் கொள்ளவேண்டும். இவ்வளவு பெரிய காரியம் வந்தபின் வெறுப்பாக உள்ள மனிதரை அவருக்குரியவர் ஏற்கவேண்டும் என்பது வாழ்வு அவருக்கு அளித்தது.

நமக்கு பம்பாய்க் கம்பனி கான்ட்ராக்ட் பெரிய விஷயம். போன் ரிப்பேர் சிறிய விஷயம். சமர்ப்பணத்திற்கு இரண்டும் சமம்;
சிறியது பெரியதில்லையா?

✡ பெரியது, சிறியது உலகில் முக்கியம். பிரம்மத்திற்குப் பெரியது, சிறியதில்லை.

✡ பெரியது, சிறியது தோற்றம் - பிரம்மம் விஷயம்.

✡ இதை உதாரணங்களால் விளக்குவதைவிட சோதனைமூலம் செய்து பலனைக் கண்டு மனத்தைத் தெளிவு செய்யலாம். பம்பாய்க் கம்பனி கான்ட்ராக்ட், போன் ரிப்பேர் இரு விஷயங்கள். போன் ரிப்பேர் சமர்ப்பணத்தால் முடிந்தால் கான்ட்ராக்ட் தானே முடியும். அதுவே நடந்தது. ஆனால், அதைத் தலைகீழே - கான்ட்ராக்ட்டால் போன் ரிப்பேராயிற்றுஎனப் - புரிந்துகொள்வதுபோல் நடந்துவிட்டது. சோதனை: போனைச் சமர்ப்பணத்தால் ரிப்பேர் செய்தால், கான்ட்ராக்ட் கையெழுத்தாகும். அதைக் கண்டபின் மனம் இரண்டும் சமம்என ஏற்கவேண்டும். அது நடந்துவிடும். மனம் ஏற்காதுஎன்பது நடைமுறை.



✡ சமர்ப்பணத்திற்குப் பெரியது, சிறியது என்பதில்லை என்பதை மனம் ஏற்பது பெரியது. பிரதமராக நேரு 58 வயதில் தயாரானார். அவர் பேரன் 40 வயதில் பிரதமரானார். பதவிக்கு வயதில்லை. பதவியைப் பொருத்து மரியாதை, வயதைப் பொருத்ததன்று.

❀ சமர்ப்பணம் முக்கியம். பெரியது, சிறியது என்பது முக்கியமில்லை.

❀ சமர்ப்பணமானால் சிறியது பெரியதாகிவிடும்.

❀ சமர்ப்பணம் செய்யும்பொழுது உள்ளே அவை சமம்என ஒரு குரல் சொல்லும். அதை நாம் பொருட்படுத்தவேண்டும்.

❀ 5 watt பல்பும், 500 watt பல்பும் மின்சாரத்திற்குச் சமம். சிறிய பல்ப் எரிந்தால் கரண்ட் இருக்கிறதுஎனப் பொருள். பெரிய பல்ப் எரிந்தால்தான் கரண்ட் இருப்பதாக அர்த்தமன்று.

❀ பலித்தால் சமர்ப்பணம் எல்லா இடங்களிலும் பலிக்கும். இல்லையெனில் எங்கும் பலிக்காது.

❀ நமக்கு ஊரில் பெரியவர், சிறியவர்; காரியத்தில் சிறியது, பெரியது என்ற நம்பிக்கை சமர்ப்பணத்திற்குக் குறுக்கே நிற்கிறது.

❀ சமர்ப்பணத்திற்குமட்டும் சிறியது, பெரியதில்லை என்பதில்லை. சிறியது, பெரியதுஎன்ற வித்தியாசம் உலகிலில்லை. தோற்றத்தில் உண்டு.

❀ நாம் தோற்றத்தைக் கருதுகிறோமா, விஷயத்தைக் கருதுகிறோமா என்பது முக்கியம்.

❀ தோற்றம் வாழ்வு; விஷயம் சமர்ப்பணம்.

❀ தோற்றத்திலிருந்து வெளிவருவது எளிதன்று.

கேலி பிறரைப் புண்படுத்தும்;
எவரையும் புண்படுத்தாமல் அனைவரையும் சிரிக்கவைக்கும் கேலியும் உண்டன்றோ?
சாப்பாட்டில் வெளிப்படும் இறைவனை நம்முள் உள்ள இறைவன் அனுபவிக்கிறான்;

Intolerable ecstasy, unflinching rapture என்பவற்றை நாம் பாக்டரி, போன் ரிப்பேர், கான்ட்ராக்ட், தோப்புக் குத்தகைஎன்ற பலன்களாகப் பெறுகிறோம்;
மூன்றாம் நிலை அன்பைத் தாங்கிவரும் பரிசு:

- ✡ கேலி எதிரியின் கூர்மையான ஆயுதம். Humour is the savour of life என்பது பகவான் வாக்கு. ஹாஸ்யம், நகைச்சுவைஎன நாம் கூறுவதும் humourஎன ஆங்கிலத்தில் சொல்வதும் சற்று மாறுபட்டது. ஹாஸ்யம் நம்மை நகைக்க வைக்கிறது. Humour நம் மனத்தை இனிக்க வைக்கிறது. நாட்டுக்கு நாடு நகைச்சுவை மாறுபடும். கேலி நம் நாட்டில் வெறியேற்றுவதுஎன்ற கொடுமையை எட்டிவிட்டது. அது கொடுமையின் கருவி.

  அதனால் கேலி தரித்திரத்தின் சின்னம்.

  வறுமைஎன்பது இல்லாமை.

  தரித்திரம்என நாம் குறிப்பிடுவது வறுமையைப் போற்றி அனுபவிப்பது.

  கேலியுள்ள இடத்தில் அன்னை வரமாட்டார்.

  இக்கதையில் தாயாரின் பக்தி பெரியவனின் கேலியைவிட வலுவானது. பெரியவன் கேலியில்லாவிட்டால் தாயாரின் பக்தி இருமடங்காகப் பலிக்கும்.

- ✡ கேலிக்கு, ஹாஸ்யத்திற்கு அத்தனை கெட்ட குணமிருந்தாலும், எவரையும் புண்படுத்தாமலும் எல்லோர் மனமும் இனிக்கும் ஹாஸ்யம் humour. ஹாஸ்யத்திற்கு அப்படிப்பட்ட உயர்வுண்டு. அதற்குச் சொல்வன்மை தேவை. மனிதனைக் கேலி செய்யாவிட்டால் சொல்லை, நிகழ்ச்சியைக் கேலி செய்யலாம்.
- ✡ Humour, ஹாஸ்யம் பிறரைச் சந்தோஷப்படுத்த முனைகிறது. கேலி, வெறியேற்றுவது பிறரைப் புண்படுத்த முனைகிறது. நம் சந்தோஷம் பிறரைச் சந்தோஷப்படுத்துகிறது. Ecstasy பூரிப்பு நம் சந்தோஷத்தின் உச்சக்கட்டம்.
  - ❀ இறைவன் பூரிப்பைக் கொடுத்தாலும், நாம் அதை நமக்குரியது போல் மாற்றினால் அது பாக்டரியாகும், வெறும் பூரியுமாகும்.
  - ❀ இந்த மாற்றமும் இருவகைகளாகும். உயர்ந்த பூரிப்பு, சாப்பிடும் பூரியாகலாம்.
  - ❀ அதுவே ஆனந்தம் வெளிப்படும் பூரியானால், அதை சாப்பிடுபவருக்கு மரணமில்லை. அது சச்சிதானந்தப் பூரிப்பாகும்.
  - ❀ அதுவே ஸ்ரீ அரவிந்தம் கூறும் மூன்றாம் காலம், மூன்றாம் நிலை.
  - ❀ காலத்தைக் கடந்தவர் ரிஷி.
  - ❀ அவர் காலத்துள் வரமாட்டார். வரமுயன்றால் ஒத்துவாராது. கடந்த நிலை போய் அவரும் நம்மைப்போல் காலத்துள் வருவார்.
  - ❀ கடந்ததை இழக்காமல், காலத்துள் வந்து, செயல்பட்டால் காலத்திலோ, கடந்த நிலையிலோ செயல்படமுடியாது. மூன்றாம் நிலை எழும்.



அடுத்தவர் செய்யும் அட்டகாசம், அட்டூழியம், அநியாயம், ஆண்டவன் செய்யும் நியாயம், ஆர்ப்பாட்டம், சிருஷ்டிஎன மனம் பூரிப்பது;
சத்தியஜீவியம்என்பது சத்தியத்தின் பரநலமான நல்லெண்ணம்எனக் கூறலாமா?

- ✡ தலைவரை எதிர்க்கப் பிரியப்பட்டு, எதிர்க்க முடியாதவன், அவருக்கு அடுத்தவரை எதிர்ப்பான், தலைவர் கொள்கைகளை எதிர்ப்பான், தலைவர்போல் நடக்கும் மற்றொருவரைக் குறை கூறுவான். அடிமனம் மேல்மனத்துடன் பேச இயலாது. மேல்மனம் இடம் கொடுக்காது. அதனால் அடிமனம் மேல்மனம் பிரியப்படுவதன்பின் தன் அபிப்பிராயமிருந்தால், மேல்மனத்தை அதை நாடும்படிக் கூறும். அவ்விஷயத்தை மேல்மனத்தை நோக்கி வரச்செய்யும். மேல்மனம் அதை நோக்கிச் செல்லும். அடிமனத்தின் இலட்சியம் அவ்வாறு மேல்மனத்தால் பூர்த்தியாகும். அதுவே மேல்மனத்திற்குப் பிரச்சினை.

ஒருவருக்கு ஆன்மீகப் பக்குவம் வரும் நேரம், உலகில் தீமை இருப்பதையோ, தன்னுள்ளே தீமையிருப்பதையோ அவர் அறியாதவரானால்,

❀ அவர் பக்குவம் பெற the dark imperative தன்னுள்ளேயுள்ள இருளை அவர் திருவுருமாற்றவேண்டும். அவர் மேல்மனத்திற்கு உள்ளே இருள் இருப்பதே தெரிவதில்லை. அவரது அடிமனம் அதைச் சாதிக்க வெளியிலிருந்து தீமையைப் பணிவாக அவர்முன் வைக்கிறது. பணிவால் ஈர்க்கப்பட்டவருக்குத் தாம் தீமையை ஏற்கிறோம்எனத் தெரிவதில்லை. பணிவுக்குரிய கடமை முடிந்தவுடன் தீமை போர்க்கோலம் பூணும். தம்முள்ளேயுள்ள தீமையை ஏற்காமல், அதைத் திருவுருமாற்ற சம்மதிக்காமல் அவரால் வெளியிலுள்ள தீமையைச் சமாளிக்க முடியாது.

❀ இதுவே அடுத்தவர் செய்யும் அட்டகாசம், அட்டூழியம், அநியாயமாகும்.

❀ இவை தம் அடிமன ஆர்ப்பாட்டம்என அவர் அறியவேண்டும்.

❀ இதுவே தம் மனத்திற்குமட்டும் உரியதன்று, உலகுக்குரியது எனவும் அறியவேண்டும்.

❀ இது ஆண்டவனின் நியாயமாகத் தெரிவது அவசியம்.

❀ சிருஷ்டியின் பாங்கு இது.

❀ அதைக் கண்டு மனம் வெதும்புவது அறியாமை.

❀ கஷ்டப்படாதது அறிவு.

❀ பூரிப்படைவது ஞானம்.

✡ *சத், சித், ஆனந்தம், ஐக்கியம், சத்தியம், நன்மை, ஞானம், உறுதி, அன்பாகப் புறத்தில் வெளிப்படுவது சத்தியஜீவியம்.*

❀ அதனால் சத்தியஜீவியத்தை இந்த ஆறு அம்சங்களில் ஒன்று அல்லது பலவற்றால் குறிக்கலாம்.

❀ பரநலம் என்பது நன்மை.



❀ சத்தியத்தையும், பரநலத்தையும் இணைப்பது நல்லெண்ணம்.

❀ எனவே சத்தியஜீவியத்தை நாம் அப்படிக் கூறலாம்.

❀ பிறர் பலன் பெற உண்மையாகச் செயல்படுவதை சத்தியஜீவியம் எனலாம்.

❀ நமக்கு ஆதாயமில்லாத சத்தியம் சத்தியஜீவியம்.

நாம் உள்ளே உயர்வாக இருந்து, பணத்தை அன்னைமூலமாக மட்டுமே சம்பாதித்து, உடல் பிரம்மச்சர்யத்தை ஏற்று, பழக்கம் பண்புடையதாக இருந்து, பரநலத்தைக்கடந்த பரநலமே நம் நலம் எனப் பயின்று, ஆதாயத்திலும் அன்பைக் கண்டு, பக்குவம் பவித்திரமாகி, நன்றி நிலையானால், அது சத்தியஜீவியத் திருவுருமாற்றம்:

✡ திருவுருமாற்றம் மனம், முனிவர், ரிஷி, யோகி, தெய்வம், உயிர், உடலுக்குண்டு.

✡ நமக்கு அன்னையோடு ஏற்படும் தொடர்புகள், எந்தத் தொடர்பு எந்த நிலைக்குரியது, எது பிரார்த்தனை, எது தியானத்தால் வருவது, எது நல்ல குணத்தால் வருவது, எது மௌனத்தால் வருவது, எது திருஷ்டிக்குரியது, ஞானத்திற்குரியது எது, தெய்வீகமனம் எப்பொழுது செயல்படுகிறது என்பதை அறிவது யோகஞானம்.

✡ இத்தனை levelக்கும் மூன்று கட்டங்கள் உள்ளன.

உதாரணமாக மனம்என்பது பிரகிருதி. மனம் சாட்சிப்புருஷனை வெளிப்படுத்துவதும், சைத்தியப்புருஷனை வெளிப்படுத்துவதுமான 3 கட்டங்கள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ❀ | பிரகிருதி | ஜீவன் | சைத்தியப்புருஷன் |
| ❀ | காலம் | காலத்தைக்கடந்தது | காலத்தின் மூன்றாம் நிலை |
| | மனம்[1] | புருஷனுக்குரிய மனம்[2] | மனத்தின் சைத்தியப்புருஷன்[3] |

| | | |
|---|---|---|
| ❀ சிந்தனை மனத்திற்கு உரியது[1] | மௌனம் புருஷனுக்கு உரியது[2] | அன்னை வெளிப்பட்டு சிந்தனை மணம் கமழுவது மனத்தின் சைத்தியப் புருஷனுக்குரியது[3]. |

- ❀ கதையில் தாயார்தவிர மற்றவர்கள் மனநிலை, பேச்சு, செயல் [2]மனத்திற்குரியவை.
- ❀ கம்பனி வந்தது, பாக்டரி பெருகுவது ஆகியவை [3]மனத்தின் சைத்தியப்புருஷனுக்குரியவை.
- ❀ வந்த வாய்ப்புகளை மனம்முதல் உடல்வரை (சத்தியஜீவன்வரை) பிரித்துப் பிரித்துச் சொல்லலாம். அப்படிப் பார்க்கும்பொழுது ஏற்படும் தெளிவு:
  - ☆ யோகத்தால் வாழ்வை அறிவதாகும்.
  - ☆ யோகத்தால் வாழ்வை அறிந்தால், யோகசக்தியை வாழ்வில் பயன்படுத்தலாம்.
  - ☆ குடும்பவாழ்வில் யோகதத்துவம், அம்சம்என்பது அதை விளக்க முயல்வதாகும்.
  - ☆ இக்கதையில் சுமார் 100முதல் 200வரை சிறிய, பெரிய நிகழ்ச்சிகள் உள்ளன. அவற்றை எடுத்து, ஆய்ந்து, விளக்குவது வாழ்வில் யோகஞானம் பெற உதவும்.
  - ☆ 243 பக்கங்களுக்கு 243முதல் 2430 பக்கங்கள்வரை அதுபோன்ற விளக்கம் எழுதலாம்.
  - ☆ நான் எழுதுவது சுட்டிக்காட்டுவது.
  - ☆ அதன்மூலம் படிப்பவர் மற்ற அனைத்தும் பெறமுடியும்.

அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லு - வேலைக்காரியின் கணவன்;
நானும் அதைச் செய்துபார்க்க ஆசைப்பட்டேன் - வேலைக்காரி;
அதைத் தொடர்ந்தால், தோப்பு உன்னிடம் வந்துவிடும் - தாயார்;



அப்படியெல்லாம் (மூடநம்பிக்கையால்) அன்னையை நம்பமுடியாது:

- ✡ சந்தோஷம் பரவசப்படுத்தும். அன்னை தரும் சந்தோஷம் அனைவரையும் பரவசப்படுத்தும். பரவசப்பட்டால் முக்கியமான விஷயமும் மறந்துவிடும். தோப்பு சொந்தமாக வந்தபின்னும் வேலைக்காரிக்கு அது வாயில் வரவில்லை. அவள் கணவன் விஷயத்தைச் சொல்லு, சொல்லு என்கிறான். பரவசம்என்பது ஜீவனின் சமர்ப்பணம். அதனால் மறந்துபோகும். பரவசம்என்பது அன்னைவசம். நாமே அன்னைவசமானால், நம் விஷயமும் அவர் வசமாகிவிட்டதால், நமக்கு நினைவு வாராது. வேலைக்காரியின் நம்பிக்கை உயர்ந்தது. அது மூடநம்பிக்கையில்லை. மூடநம்பிக்கை உள்ளவர்கள் காட்டேரி கும்பிடுவார்கள். ஆசிரமத்திலேயே இருந்தாலும் அன்னை நினைவு வாராது.
- ✡ சமர்ப்பணம் பெரிதுஎனக் காதில் விழுந்தவுடன் வேலைக்காரி செய்து பார்க்க ஆசைப்படுவது சூட்சுமத்தில் தீட்சை பெறுவதாகும். வேலைக்காரி சூட்சுமமாக இருப்பதால் அவளுக்குத் தோப்பு குத்தகைக்கும், சொந்தமாகவும் வருகிறது. ஏகலைவன் துரோணர் சொல்லிக்கொடுக்க மறுத்ததை அவர் அடிமனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்கிறான். துரோணர் ஏகலைவனுக்குத் தலை போன்ற வலக்கைக் கட்டைவிரலைக் காணிக்கையாகக் கேட்டதால், போரில் சிகண்டி துரோணர் தலையைச் சீவுகிறான். பெரிய ஞானத்தின் எதிரான அம்சம் துரோணர் கேட்கும் காணிக்கை.
  - ❀ பொய்யிலும், இருளிலும் சாஸ்திரம் செயல்பட்டால், அதற்கு எதிரானது இதுபோல் வரும்.
  - ❀ சாஸ்திரம் வேடுவனுக்கில்லைஎன்ற பொய்யை நிலைநிறுத்திய காலம் அது.
  - ❀ அன்னை வாழ்வில் வேலைக்காரிக்கும் தோப்பு உண்டு.
  - ❀ பொய்யின் வாழ்வுக்கும், மெய்யின் வாழ்வுக்கும் உள்ள வித்தியாசம் இது.

✡ சத் விஷயம் பிறர் காதில் விழுந்தால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்என்பது பொய்யின் ஆட்சி. காதில் விழுந்தால் பலிக்கும் என்பது சத்தியத்தின் ஆட்சி.

✡ வேலைக்காரிக்கு மூடநம்பிக்கையில்லை. அவள் நம்பிக்கை எளிமையானது. அவளுக்கு வீட்டு விஷயம் தெரியும். எளிமையான நம்பிக்கை தூய்மையானதுஎன்பதால் எட்டாத உயரம் எட்டுகிறது. அவளுக்கு ஜீவாத்மா, பரமாத்மா தோப்புபோல் சூட்சுமமாகவும் காதில் விழாது. விழுந்தாலும் தோப்பு பலிப்பதுபோல் பலிக்காது.

- ❀ பலிப்பது பர்சனாலிட்டியின் தரத்தைப் பொருத்தது.
- ❀ ஆத்மா பக்குவமானதுஎனில் எளிமையான நம்பிக்கை தூய்மையானதானால், காதில் விழுவது சித்தியைத் தரும். அது விதிவிலக்கு. அதை விதியாகச் சொல்ல முடியாது.
- ❀ தாயார் இனி சொல்லப்போவது வேலைக்காரிக்கு முன்னதாகவே பலிக்கிறதுஎன்பது சூட்சுமத்தைக் கடந்த காரணலோகம் (causal plane).
- ❀ காரணலோகத்தில் பலித்தாலும் தோப்புதான் பலிக்குமேதவிர பிரம்மம் சித்திக்காது.

நமக்கெல்லாம் நம்பிக்கையே வரமாட்டேன்என்கிறது - கணவர்;
அது அன்னை கொடுக்கும் தண்டனையில்லை. அவர்களே பெறுவது - தாயார்;
கொடுப்பது அன்னை, பெறுவது நாம் - கணவர்:

✡ நம்பிக்கை என்பது என்னஎன்று எல்லோரும் எழுதுவதில்லை. நம்பிக்கை வேண்டும்என்று கூறுவதுடன் சரி. நம்பிக்கையை விளக்கமாக எழுத, எழுதுபவர் நம்பிக்கையைக் கடந்த நிலைக்கு உரியவராக இருக்கவேண்டும். நாம் எதை நம்புகிறோம்? எழுதும்போது பேனா தொடர்ந்து எழுதும்; நடக்கும்பொழுது காலடியில் தரை இல்லாமல் போகாது, இருக்கும்; சாப்பிட்டால் சாப்பாடு ஜீரணமாகும்என நம்புகிறோம் என்றால், அது இயல்பான நம்பிக்கை sub-conscious faith. இத்தனை நாள் நடந்தது, இனியும் நடக்கும் என்பது instinct, அது தவறாது. படித்தவன், விவரம் தெரிந்தவன், மனம் வளர்ந்தவன் conscious தன்னையறிந்தவன். Consciousஆன பிறகு consciousஆகச் செய்யும் வேலையில் sub-conscious faith எப்படியிருக்கும்? அது வந்தால் நம்பிக்கையின் தரம் உயரும்.

- ❀ நம்பிக்கை இயற்கையாக (sub-conscious) இருப்பது.
- ❀ செயற்கை வாழ்வு வந்தால் நம்பிக்கை போய்விடும்.
- ❀ இயற்கையான நம்பிக்கை சிறியது.
- ❀ செயற்கை வாழ்வை மீறி எழும் நம்பிக்கை பெரியது.
- ❀ செயற்கை வாழ்வில் மனிதன் இயற்கை வாழ்வைவிடப் பெரியவன்.
- ❀ பெரியவனுடைய நம்பிக்கை பெரிய நம்பிக்கை.
- ❀ செயற்கை இயற்கையாக மாறுவது மனிதன் வளர்வது.
- ❀ இயற்கையான வாழ்வு இயல்பானது.
- ❀ செயற்கையான வாழ்வு பிறரை நம்பிய வாழ்வு.
- ❀ செயற்கையான வாழ்வில் மனிதன் இயல்பானால் செயற்கை இயற்கையாகிவிடும்.
- ❀ மனிதன் என்பவன் தானே செயல்படுபவன்.
- ❀ இயற்கையோ, செயற்கையோ, தன்னையறிபவன் மனிதன்.
- ❀ செயற்கையான மனிதன் அன்னையிடம் வந்து விலகினால் அவனுக்கு உள்ளதும் போகும்.
- ❀ அன்னை கொடுப்பதைப் பெற மனிதன் இயல்பாகத் தன்னையறிய வேண்டும்.
- ❀ இயற்கைஎன்பது முழுநிலை.

- ❀ செயற்கைஎன்பது பகுதி, ஜீவனற்ற பகுதி.
- ❀ இயற்கை ஜீவனுடையது.
- ❀ அன்னை கொடுப்பதைப் பெற அவரளவில் முழுமையாக ஜீவனோடிருக்க வேண்டும்.
- ❀ அன்னையை அறியாமல் ஏற்றவர் பேர்ஆதரவு பெறுகிறார். செயற்கை, பகுதியை மீறி ஆதரவு செயல்படுகிறது. ஆதரவை விட்டு அகன்றால் ஜீவனற்ற செயற்கையான பகுதி வாழத் தகுதியற்று அழியும்.

கம்பனி உங்களால் அவருக்கு வந்தது என்று சொல்ல பார்ட்னருக்கு என்ன அடக்கம் வேண்டும்?
அன்னை பாதுகாக்கமாட்டார்களா?
நீ அன்னையை விலக்காதவரை, அவர் விலகமாட்டார். மெனக்கெட்டு விலக்கினால் அன்னை அங்கிருக்கமாட்டார்;
பொங்கலில் புதுநெய் விட்டால் மணமாக இருக்கும். கல்லிருந்தால் பல்லை உடைக்கும். உள்ளதற்குப் பலன்:

- ✡ நான் அனைவரிலுமிருக்கிறேன்என்ற ஆத்மஞானம் என்னைப் பெரியவனாகக் கருதாது. அதுவே அடக்கம்.
- ✡ அடக்கமாக இருப்பது ஒன்று. அடக்கமாகப் பேசுவது அடுத்த கட்டம். அது ஞானம் ஜீவியமாவது (knowledge becomes consciousness).
- ✡ அடக்கமாகப் பேசவும் முடியாதது இனிமை. அது ஜீவியம் பொருளாவது (consciousness becomes substance).
- ✡ அடக்கம் பண்பு, அடக்கமாகப் பேசுவது பண்பின் சிறப்பு, அடக்கமாக இருப்பது பண்பின் பவித்திரம்.
- ✡ இவ்வளவுமிருந்தும் பார்ட்னர் அன்னையைத் தாயார்போல் ஏற்றவரில்லை. அவரிடமுள்ள உயர்ந்த பண்பு, அன்னையை



அதிகமாகப் பெறுகிறது. அதே பண்பு அவருக்கு முக்கியமானவுடன் அது அன்னையை ஏற்கத் தடையாகிறது. வேலைக்காரி காதில் விழுந்த செய்தி அவளை பக்தையாக்கி, முடிவான கட்டத்திற்கு வெகுசீக்கிரம் கொண்டுவருகிறது.

- ❀ பார்ட்னர் பண்புமிக்கவர்.
- ❀ தாயார் பண்பைக்கடந்த பக்தியுடையவர்.
- ❀ வேலைக்காரி பண்பில்லாவிட்டாலும், பண்பைக்கடந்த பக்குவம் உள்ளவர்.
- ❀ வேலைக்காரிக்கு அவள் வேலையில் உள்ள (work value) கடமை உணர்ச்சி பார்ட்னரைக்கடந்த பலன் தருகிறது.
- ❀ அடக்கம் உயர்ந்தது.
- ❀ அதைவிட உயர்ந்ததும் உண்டு.
- ❀ எதுவும் உயர்ந்ததில்லைஎன்பது ஆத்மாவைக்கடந்த பிரம்ம ஞானம்.

- ✡ அன்னைக்கு எதிராக நடந்து, அன்னையை மெனக்கெட்டு விலக்கியபின், ஏன் அன்னை பாதுகாக்கவில்லைஎன்பது மனிதன் அன்னையைமட்டும் கேட்பதில்லை.
  - ❀ பூரணச்சுதந்திரம் உள்ள இடத்தில் மனிதன் நடக்கும் பாணி இது.
  - ❀ மனிதன் இக்கேள்வியை அனைவரிடமும் கேட்பதில்லை.
  - ❀ தனக்கு முழுவதும் கட்டுப்பட்டவர், தம் அநியாயத்தை எதிர்க்கவும் திறனற்றவர், 'இவனை எது செய்தாலும் கேட்பாரில்லை'என்று அறியும் உறவில் மனிதன் அப்படிப்பட்ட குறையைச் சொல்வான்.
  - ❀ பலருக்கு அதுபோன்ற உறவு, கொடுமை செய்யக் கிடைப்பதுண்டு.
  - ❀ தாம் யார் கீழேயிருக்கிறோமோ அவரிடம் அந்தச் சுதந்திரத்திற்கு வழியில்லை.

❀ அந்த உறவில் இந்தச் சுதந்திரம் நினைக்கவும் முடியாது.

❀ மனிதன் அன்னையை 'என்ன ஆயிற்று உங்கள் பாதுகாப்பு'எனக் கேட்கிறான்எனில், அவன் அன்னையிடம் அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கிறான்எனப் பொருள்.

❀ சுதந்திரம் வளரும் சந்தர்ப்பம். அதை நல்ல முறையில் பயன்படுத்துவது வளர்ச்சி.

அவ்வளவு பிரியமாக வைத்திருந்த புத்தகத்தை அர்த்தமற்றவருக்குக் கொடுத்தது தவறு;
அன்னை என்னை நல்லபடியாகமட்டும் வைத்திருக்கமாட்டாராஎனக் கேட்கிறான் - கணவர்;
அந்த நினைப்பு போகும்வரை அன்னை அருகில் வரமாட்டார்:

✡ மனிதனுக்கு முக்கியமானது தான் வாழவேண்டும் என்பதில்லை. பிறர் அழியவேண்டும். தன்னால் பிறர் அழிக்கப்படவேண்டும். *"இறைவன் திருவுள்ளத்திற்கு எதிரான பிரார்த்தனைகள்தவிர மற்ற எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கும்"*. அகந்தை அழியவேண்டும்என்பது திருவுள்ளம். மனிதன் தன் அகந்தையை வளர்க்கமட்டும் முயல்கிறான். அந்த நினைப்பு போகும்வரை அன்னை அருகில் வரமாட்டார். பிறருக்கு உதவமுடியாது, கூடாது என்பதன் காரணம் இதனுள் உள்ளது.

❀ உதவி உன்னதமானது. ஆத்மா அளவில் உதவி அற்புதமானது. அகந்தையில் வாழும் மனிதன் உதவி செய்தால் அகந்தைக்கே உதவுவான்.
அகந்தை அழிக்கமட்டும் முயலும்.
நாம் செய்யும் உதவியை அகந்தை பிறரை அழிக்கப் பயன்படுத்தும்.
பிறர்என்பது நாம்.
அதனால் உதவி உபத்திரவத்தில் முடியும்.



❀ எப்பொழுதும் பாதுகாப்பு வேண்டும்என்பவர் அகந்தையுள் வாழ்பவர்.

❀ உதவி உயர்ந்ததுஎன்பது மேலெழுந்தவாரியான சமூகக் கண்ணோட்டம்.
உதவியைப் பெறுபவர் சுருங்குவது அகந்தையின் உணர்வு.
சுருங்கும் உணர்வு இயல்பாக விரியும்.
விரிவது அகந்தை.
எவருமே பிறர் அகந்தை விரிவுபட இடம்தரமாட்டார்கள்.
உதவி செய்பவர் இடம் தருகிறார்.
உதவி செய்தவருக்கு, ஊறு செய்வது சட்டம்.

❀ கேள்வியின் தரம் புரிந்தவுடன் அவரைவிட்டு விலகுவது பாதுகாப்பு.

❀ *எவரருகில் அன்னை வரமாட்டாரோ அவரருகில் நாம் போகாமலிருப்பது நன்று.*

✡ 400 பக்கங்களுக்குக் குறிப்பெடுப்பது 400 நாள் வேலை. பரீட்சைக்குப் படிக்கும் புத்தகம்போல, பகவான் எழுதிய நூலை அப்படிப் படித்தால் என்ன ஈடுபாடு ஏற்படும்? அதன் பவித்திரம் தெரியாதவர், அதையும் ஒரு புத்தகம்என நினைத்தால், அதைவிடத் தவறில்லை. எவருக்கு நாம் புத்தகம் தருகிறோம், எப்படித் தருகிறோம்என்ற தராதரம் தெரிய வேண்டும். அப்படிப்பட்ட புத்தகத்தை நாம் உள்ள இடத்தில் வந்து வாங்கிக்கொண்டு போகவேண்டும்.

❀ நாமே அவர் வீட்டிற்குப் போய்த் தருவது பெருந்தன்மையில்லை. விவரம் தெரியாதது.

❀ போன இடத்தில் அவரில்லைஎன்பதையும் கவனிக்கத் தெரியாதவர் கொடுத்தார்.

❀ அவர் வீட்டில் ஏராளமான புத்தகங்கள் தரையில் உயரமாக அடுக்கிவைக்கப்பட்டதைக் கண்டவுடன், 'இவர் புத்தகங்களை அலமாரியிலும் வைக்காதவர்'எனப் புரியவேண்டும்.

❀ இவரோடு என்ன தொடர்பு? 25 வருஷங்களுக்குமுன் உதவி கேட்டுப் பெற்றவர். பெற்றதற்கு நன்றியும் சொல்லாதவர். என்ன உதவி? இக்கட்டான நிலையில் கேட்கக்கூடாத உதவியைக் கேட்டுப் பெற்றவர். உபத்திரவம் செய்யும் உரிமையுடையவரைத் தேடிப் போய் நமக்கு ஊறு செய்ய கருவியை அவர் கையில் கொடுத்ததுபோல் அன்பர் நடந்தது குற்றம்.

"நான் உங்கள் பையன். நான் என்ன கொட்டமடித்தாலும், உங்கள் பையன்என்று அன்னை காப்பாற்றுவாரா?"எனக் கேட்கிறான் - பெரியவன்;
ஓடிப்போன பையனை எத்தனை வகையாகக் காப்பாற்றி விட்டுக்குக் கொண்டுவந்தார் - பெண்:

✡ உலகில் நல்லபாம்பை ஏன் ஆண்டவன் படைத்தான்என்பது அடிப்படையான கேள்வி.

✡ உயிரைக் கொல்லும் விஷம் ஏன் ஏற்பட்டதுஎன்பதும் அதுபோன்ற கேள்வி.

✡ பாக்டீரியா, வைரஸ் எதற்காகச் சிருஷ்டியில் உள்ளன?

✡ இந்தக் கேள்விகட்கு உலகில் பதிலில்லை.

✡ ஸ்ரீ அரவிந்தம் பதில் கூறுகிறது.

✡ தேடுவது ஆனந்தமானால், அதிகமாகத் தேடினால் பெரிய ஆனந்தம் உண்டு.

✡ விஷம் அமிர்தத்திற்கு எதிரானதுஎன்பதால் அமிர்தத்தைக்கடந்த உயர்ந்த பொருளை உற்பத்தி செய்ய ஓர் உபாயம் வேண்டும். அது விஷம் திருவுருமாறுவது.

✡ திருவுருமாற்றம் ஆனந்த மார்க்கம்.

✡ பெரிய திருவுருமாற்றம் பேரானந்தம்.

✡ பெரிய திருவுருமாற்றத்திற்குரியது பெரிய தீமை, பெரிய விஷம்.



✡ நல்லபாம்பு கொத்தும். அது படமெடுத்துத் தூங்குபவன் தலைமீது படம் பட்டால் அவன் அரசனாவான்.

✡ நல்லபாம்பு சீறினால், கொத்தினால் அடிக்கவேண்டும். படமெடுத்து ஆசீர்வாதம் செய்தால் பவித்திரமாக ஏற்கவேண்டும்.

✡ அன்னை எப்படியும் காப்பாற்றுவாராஎனில் அன்னை அழிப்பதும் காப்பதுஎன்றவருக்கு எப்பொழுதும் பாதுகாப்புண்டு.

✡ வீட்டிலுள்ளவரை வீடு பாதுகாக்கிறது. வெளியில் போனபின் வீட்டின் பாதுகாப்பில்லை.

✡ வெளியில் போய் சும்மா இல்லாமல், திருடினால் ஜெயிலுக்குப் போகிறான். வீடு காப்பாற்றவில்லையேஎன்றால் ஜெயிலில் போடுவது மேலும் திருடுவதிலிருந்து உன்னைக் காப்பாற்றுவதில்லையா? வீட்டை விட்டு வெளியில்போய் நீச்சல் தெரியாத நேரத்தில் கடலில் இறங்கி இறந்துபோனால் வீடு காப்பாற்றவில்லையேஎன்றால்?

❀ கடலில் இறங்கி இறந்துபோனால், 'நீச்சல் தெரியாமல் நீரில் இறங்கினால் உயிர்போகும்'என்ற அறிவை அடுத்த ஜென்மத்தில் பெறும் மார்க்கம் அது.

❀ கடலிலிருந்தும், ஜெயிலிலிருந்தும் காக்க வீட்டை ஏற்படுத்தினால், வீட்டைவிட்டு வெளியேறுபவன் கேட்கும் கேள்விகள் இவை.

❀ அறிவுள்ளவன் அனுபவத்தால் மேலும் அறிவு பெறுகிறான்.

❀ ஆத்மா ஆழத்திலிருந்தால், இருளின் ஆழத்தில் புதைந்திருந்தால் அவை வெளிக்கொண்டுவர மனிதன் பிறரைக் கொடுமை செய்யும்படித் தூண்டும் கேள்வியிது.

❀ ''என் ஆத்மாவை நான் அறியவேண்டும். அது படிப்பால் வெளிவாராது. அனுபவத்தாலும் வெளிவாராது. ஆழ்ந்த நல்லுணர்வாலும் வெளிவாராது. பெருங்கொடுமையால், அதிலிருந்து தப்பிக்க முயன்றால் என் ஆத்மா வெளிவரும். என்னைக் கொடுமைப்படுத்துங்கள்''என்று மனிதன் கூறி,

அடிவாங்கி, நக்கீரன்போல் பெருவியாதி பெற்று தரையில் உருண்டு மோட்சம் பெறும் ஆத்மாக்கள் பிறரைக் கொடுமைப்படுத்தத் தூண்டும் கேள்வியிது.

எங்கே போனாலும், என்ன செய்தாலும் பாதுகாப்புண்டுஎன நான் நினைத்தேன் - சிறியவன்;
ஆத்மா அன்னையை அடைந்திருந்தால் அதுவும் உண்டு - தாயார்;
நாம் relics வாங்கி வைக்கக்கூடாதா? - பெரியவன்;
நம் வீடு சுத்தமில்லை. இங்கே வைக்கக்கூடாது - தாயார்;
"அவர்கள் வைக்கும் சூன்யத்தை பிரம்மாமட்டுமே எடுக்கமுடியும்" - அன்னை:

✡ *பிரம்மம் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் அதற்கு அழிவோ, ஆபத்தோ இல்லை.*

முளையும் செடியை ஆடு, மாடு அழிக்கும்.
வளர்ந்த மரத்தை மனிதன் வெட்டி விறகாக எரிப்பான்.
செடிக்குள்ள அழிவு மரத்திற்கில்லைஎன்றால் மரத்திற்கு வேறு வகையான அழிவுண்டு.
காற்று கடற்கரையில் வீசுகிறது, நெருப்பைக்கடந்து செல்கிறது, வீட்டில் அடைபட்டுள்ளது, நம் வயிற்றுக்குள் உறைகிறது. காற்றுக்கு எவராலும், எதுவாலும் அழிவில்லை. ஏனெனில் காற்றுக்கு, செடி, மரம்போல் உருவமில்லை. உருவமிருந்தால் உருவத்தை அழிக்கலாம். ரூபமற்றதற்கு அழிவு கிடையாது. ரூபத்தைக்கடந்த பிரம்மத்திற்கு அழிவுண்டோ? எங்கே போனாலும், என்ன செய்தாலும் பாதுகாப்பு வேண்டும்என்பவர் ரூபத்தைக்கடந்தவரானால் அவருக்குப் பாதுகாப்புண்டு.

அந்த ஞானம் ஆழத்துள்ளிருப்பதை சிறியவன் இப்படி வெளிப்படுத்துகிறான்.



✡ பால் அமிர்தம். மறுநாளைக்குக் கெட்டுவிடும். காலம் அமிர்தத்தை விஷமாக்கும். Relics பகவானுடைய உடலின் பகுதிகள். உயர்ந்தவை என்றால் உயர்ந்த சூழ்நிலையில் அது உயர்ந்ததாக இருக்கும். சூழ்நிலை தாழ்ந்ததானால், தாழ்ந்த சூழ்நிலைக்கு relics வீரியம் கொடுக்கும். அணுகுண்டு உலகப்போரை ஜெயித்தது. போரில்லாத பொழுது அணுகுண்டு சூழ்நிலையை விஷமாக்குகிறது. சதாம் ஹுசேனிடம் அணுகுண்டு உலகத்திற்கு ஆபத்து.

- ❀ அணுகுண்டு யாரிடம் இருக்கவேண்டும்என்பதுபோல்,
- ❀ Relics எப்படி வைக்கப்படவேண்டும்என்று நிர்ணயம் உண்டு.
- ❀ சட்டம் மாறினால் பலன் எதிரானதாகும்.

✡ பெரிய ஞானம் சூன்யமானது உலகச் சரித்திரம்.

- ❀ பெரிய ஞானம் பெறுவது மனம்.
- ❀ மனம் பகுதியானது. இருபுறமும் செயல்படும்.
- ❀ மனம் பெற்ற ஞானம் வேதம், வேதாந்தமானாலும், மனம் நேரானால் அது வேதம்; மனம் எதிரானால், தீமையானால் அது மந்திரம், மாஜிக், சூன்யமாகும்.
- ❀ மனம் மனமாகயிருக்கும்வரை நல்லது உண்டுஎன்பதுபோல் கெட்டதும் உண்டுஎன்பதைத் தடுக்கமுடியாது.
- ❀ அதனால் பெரிய மடம்என்பது தடம் மாறினால் பெரிய சூன்யத்திற்கு அஸ்திவாரம்.
- ❀ 'இராமனே எல்லாம்'என நினைக்கும் தேரையையும் இராமபாணம் தெரியாமல் துன்புறுத்தும். தெரியவில்லைஎன்றால் தவறு வரும்.
- ❀ சட்டம் மனிதனைத் தண்டிக்கக்கூடாது, திருத்தவேண்டும்என நினைப்பது மனிதன் வாழவேண்டும்என்பதால். அந்தச் சட்டம் மனிதனைப் பட்டினி போடாது, கொடுமை செய்யாது, சித்ரவதை செய்யாது. ஜெயிலில் கட்டிலும், மெத்தையும், டி.வி.யும், போனும், புத்தகமும், மருந்தும், சாமியார் உபதேசமும் தரும்.

அதிக வட்டிக்குக் கடன்வாங்கிச் சரிந்தார். மீண்டும் மீண்டும் அதையே செய்கிறார். இவர் இன்றும் கடை நடத்துவது ஆச்சரியம் - தாயார்; சம்பாத்தியம் உள்ள இடத்தில் உழைப்பு, சேவை இல்லாமலிருக்காது; அவற்றை நேர்மையெனக் கருதமுடியும்:

✡ வாழ்வில் எவர் எழுந்திருக்க முடியாதோ, எவர் மனிதனாய் வாழ முடியாதோ, எவரெல்லாம் தலைதூக்க முடியாதோ, அவர்கள் அன்னையிடம் வந்து உள்ளூர் பெரிய மனிதனாய் வாழ்கிறார்கள்.

அவர்கள் அன்னையை ஏற்கவேண்டிய முறைப்படி ஏற்றிருந்தால் எங்கோ போயிருப்பார்கள்.

✡ *அதிக வட்டி:*

வட்டி ஒருவர் தன்னைத்தான் கணிப்பதைக் காட்டும்.
கடன் வாங்குவதே பெரியது. அவர் எதிர்பார்க்கும் வருமானம், வீட்டுச் செலவுபோக கடனை அடைக்குமென்று அவர் எதிர்பார்த்தால், அவர் கடன் வாங்கலாம்.
அப்படிச் சரியாகக் கடன் வாங்கியபின் அவர் வருமானம் அவர் கையிலில்லாமல் தவறினால், அவர் போட்ட கணக்குச் சரி. கணக்குத் தவறிவிட்டதுஎனப் பொருள்.
வட்டி அதைக் கடந்தது.
எப்படியும் கொடுத்துவிடுவேன்என்பது optimism நம்பிக்கை. நம்பிக்கை நமக்குடையது. நடப்பது நாட்டுக்குரியது. நாட்டை, நாட்டு வளத்தை அறிந்தவர் நம்பிக்கை செயல்படும். அதுவும் நம்பிக்கை.

❀ கணக்கு நம்பிக்கையைவிட உயர்ந்தது.

❀ நம்பிக்கை தெம்பு தரும், கணக்கு தெளிவு தரும்.

❀ கணக்கின்பேரில் உள்ள நம்பிக்கை தெளிவான நம்பிக்கை.

❀ தெளிவான நம்பிக்கை ஜெயிக்கும்.



தெளிவும், நம்பிக்கையுமில்லாமல் வாங்கும் கடன் கடனில்லை, சூது. கல்லூரியில் சேர்ந்து படித்து, பரீட்சை எழுதி பெயிலானவன் பெயில். ஆனால், கல்லூரியில் சேர்ந்து, வகுப்புக்குப் போகாமல், தறுதலையாகச் சுற்றித்திரிந்து, பரீட்சைக்குப் போகாதவன் பெயிலானதாக அர்த்தமில்லை. அவன் மாணவனில்லை. மாணவனுக்கு உண்டான சலுகையின்பேரில் மாணவருலகத்தைவிட்டு விலகி மனம் போகும் வழி திரிந்தவன், வாழ்க்கையை முயன்று அழிப்பவன். வாழ்க்கையைவிட்டு விலகி, உலக வாழ்வில் சோதனை செய்பவன். அவன் பாதை வாழ்விலுள்ளவர் பாதையில்லை. மாணவன் படிப்பு, பட்டம், நகர வாழ்வில் தன் இலட்சியத்தைத் தேடுபவன். வகுப்புக்கே போகாதவன் குடும்பவாழ்வைவிட்டு விலகி, Life, வாழ்வில் எதையோ தேடுபவன். அவன் இலக்கு சத்தில்லை, அசத். நம்மைப்பொருத்தவரை அவன் அழிந்தவன். வாழ்வைப்பொருத்தவரை அவன் முன்னோடி. படிப்பைத் துறந்து அரசியலில் நுழைபவன் அரசியலுக்கு முன்னோடி என்பதுபோல்,

இவன் வாழ்வின் முன்னோடி.

வாழ்வைக் கடந்து இயற்கையும், அதைக்கடந்து தவமும், அதையும் கடந்து பிரம்மமும், முடிவாக பிரம்மஜனனமும் உண்டு. அந்த இலக்குகளை நோக்கிப் போகின்றவர்களில் வகுப்புக்குப் போகாத தறுதலையும் ஒருவன். அவனே அதையறியமாட்டான். தத்துவப்படி அதுவே உண்மை.

மனிதன் பொறாமைப்பட அசிங்கப்படவேண்டும்;
அதற்கு அசிங்கப்படுவதில்லை. விஷயம் அதுவே;
கடைசி நிலையில் உள்ளவரும் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தங்களை உயர்வாக நினைக்கத் தவறுவதில்லை:

✡ இம்மனப்பான்மை அன்னைக்குத் தடை.

✡ மனிதன் உயிர் வாழவேண்டுமானால், அவனுக்குத் தெம்பு வேண்டும், எதிர்காலம் உண்டுஎன்று நம்பவேண்டும். தனக்கும் உயர்வுண்டு என்று கருதவேண்டும். இவையில்லாவிட்டால் அவன் தளர்ந்து, சோர்ந்து, வாடி, வதங்கி, உதிர்ந்துவிடுவான்.

- ❀ அக்காரணத்தால் அவன் பழைய பெருமை அவனுக்கு உதவும்.
- ❀ அதுவே முடிவு என்பவனுக்கு அவ்வெண்ணம் ஊன்றுகோல்.
- ❀ அதைக்கடந்து வாழ்வில் முன்னேறும் பாதைகள் உண்டு. அங்கு இந்த நினைப்பு, தடை.
- ❀ அன்னையை அறிந்தவர்க்கு எதுவும் தடைஎன்பதால், இதுவும் தடை, பெரிய தடை.
- ❀ பொறாமை, போட்டிக்கு முந்தைய நிலை.
- ❀ போட்டி போடுபவன் ஜெயித்தால் முன்னேறுவான், தோற்றால் மீண்டும் போட்டியிடுவான்.
- ❀ போட்டிக்கு அடுத்த கட்டம் ஒத்துழைப்புஎன்பதுபோல் முன் கட்டம் பொறாமை.
- ❀ இட்ட வேலையைச் செய்பவன் ஜடம்.
- ❀ பொறாமைப்படுபவன் ஜடமான மனிதருள் முன்னோடி.
- ❀ பொறாமைப்படுவது அவனுக்குத் தெம்பு.
- ❀ அவன் நிலையைக் கடந்து வந்தவன் பொறாமைப்பட்டால், அவன் சரிந்து பொறாமைப்படுபவன் நிலைக்கும் போவான்.
- ❀ பொறாமைஎன்பது கடுமையான உணர்ச்சி (violent negative vital energy).
- ❀ ஜடமான மனிதன் பொறாமையால் முன்னுக்கு வருவான்.
- ❀ அதுவே அவன் வழி என்பதில்லை. அது (negative) வேண்டாத வழி.
- ❀ பொறாமைக்கு எதிரான வேண்டிய (positive) நல்ல வழி எது?



- ❀ கடுமை தீவிரமாகி, பொறாமை போட்டியானால், தீவிரமான போட்டி எழும். அது (intense positive vital energy).

  கடுமை தீவிரமாகிறது (violence becomes intensified). பொறாமை போட்டியானால் negative, positiveஆகிறது.
- ❀ பொறாமைப்படுவதைவிடப் போட்டிப்போடுவது மேல்.
- ❀ தங்களை உயர்வாகக் கருதுவது self-confidenceஆக மாறினால் வேண்டாதது, வேண்டியதாக மாறும்.
- ❀ எதுவும் தன் நிலையிலிருந்து உயர்வது நல்லது.
- ❀ உயர்வதற்கு இரு வழிகள். நாம் நல்ல வழியைப் பின்பற்றவேண்டும்.

நீ சொல்வதைப்பார்த்தால் டயாபெடிக்ஸ் பேஷண்ட் சர்க்கரை சாப்பிட்டால் பாதிக்காதுஎன்பதுபோலிருக்கிறது;
பொதுவாக நம்பமுடியாது, இயற்கைக்கு மாறானது, இதுவரை நடக்காதது, ஆகியவை அன்னைசக்தியால் நடைபெறுகின்றன;
எல்லாம் புதிராக இருக்கின்றன:

✡ ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வருவதும் இன்று ஏதோ ஒரு ரூபத்தில் உலகில் இருக்கும். அதன்மீது force பட்டால் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் நடக்கப்போவது நடக்கும். விஷத்தைக் கொடுத்து உயிரை வைத்தியர் காப்பாற்றுகிறார். சர்க்கரையைக் கொடுத்து டயாபெட்டிக்ஸ்ஸை குணப்படுத்தலாம்என்பதை சக்தி நிரூபிக்கும். இவை நிரந்தரமாக நடக்காது.

- ❀ நம் கண்ணெதிரில் இதுபோன்றவை நடக்கின்றன.
- ❀ அன்பர்கள் ஆயிரம் காண்கிறார்கள்.
- ❀ கண்டாலும் மனதில்படுவதில்லை.
- ❀ இதைக்கண்டு அன்னையை அறிவது அன்னையை அதிகமாக அறிவதாகும்.

❀ இப்படி ஒருவர் சொல்வதை மனம் ஏற்குமானால் அவர் அன்பராவார்.

❀ நம் அன்றாட வாழ்வில் இந்த அம்சம் திரைமறைவில், ஆழத்தில் மறைந்துள்ளது.

❀ நாம் முனைந்து பார்த்தால், கூர்ந்தபார்வைக்கு அது வெளிப்படும்.

❀ பிறர் செயலில் அதைக் காணமுடிவது அன்னையின் அம்சத்தை அதற்கும் அடுத்தகட்டத்தில் காண்பது.

❀ அன்னை 800 பூக்களுக்கு ஆன்மீகப் பெயரை வாசனைமூலம் அறிந்து எழுதியுள்ளார்.

❀ இந்த அம்சம் கண்ணில்பட்டால் மணம் தரும் குணம் புரியும்.

❀ குடும்ப வாழ்வு மலர, தாம்பத்யம் மணம் வீச இந்தப் பார்வை பயன்படும்.

❀ இந்த நிகழ்ச்சி கடுகளவு இல்லாத இடமில்லை. பார்ப்பவர் எவருமிலர்.

❀ சமையலில் கடுகைத் தாளிக்கும்பொழுது கடுகு அன்னையாகத் தெரிந்தது. அன்றையச் சமையலை அப்படி இரசித்தனர்.

❀ கடுகுபோல் சமையலில் உள்ளவை பல. அனைத்தும் அன்னையே.

❀ எந்தச் செயலிலும் ஏராளமான பகுதிகள் உள்ளன.

❀ அவை அனைத்தும் பகுதியின் அன்னை.

❀ அதன்பின் முழு அன்னையுண்டு.

❀ இந்த அன்னை சமையலுக்கு முழு அன்னை.

❀ அன்னையின் முழுமை சிருஷ்டியில் பிரம்மத்தின் முழுமை.

❀ அன்னை நம் பகுதிகளிலும், முழுமையிலும் உள்ளார்.

❀ நம் முழுமையின் அன்னை முழுமையான அன்னையுடன் உறவாடுவது முடிவான பரிணாம நிலை.

❀ எது புதிராக இருக்கிறதோ, அது புது அனுபவமாகும்.



❀ புதிர் புது அனுபவமாவது அன்னையின் அனந்தமான முழுமை.

அடாவடிக்காரன் சுபாவம் அடாவடி. சுபாவத்தைத்தாண்டி அவனுக்கு ஆத்மா உண்டு. ஆத்மாவுக்கு நியாயம் உண்டு. எதனாலும் பாதிக்கப்படாமல் செயல்படும் திறனும் உண்டு. அன்னைசக்தி ஆத்மசக்தி:

✡ அடாவடி, சுபாவம், ஆத்மா, நியாயம், செயல்படுவது, அன்னைசக்தி ஆகியவை என்ன?

✡ அடாவடிஎன்ற சொல் அடாத வழி, நியாயத்திற்கு அடுக்காத வழிஎன்று பொருள்படும்.

✡ ஒளியின் வழிக்கு எதிரான இருளின் வழியாகும் அது.

✡ இருளில் உள்ளவர் இருளின் வழியை நாடுவது அவர்கட்குப் பொருந்தும்.

✡ ஒளியின் வழிக்குரியவர் இருளின் வழியை விரும்பிச் செல்வது அடாவடி.

✡ சந்தர்ப்ப விசேஷத்தால் ஒருவர் அப்படிப் பேசுவதும், அதுவே சுபாவமாகப் பேசுவதும் ஒன்றாகாது.

✡ அடாவடிக்காரனைச் சமாளிக்கவேண்டிய நேரம் அன்பர் அன்னையை அழைத்தால் ஏமாற்றம் குறைந்து மனம் நிம்மதியடையும், பிரச்சினை தீராது. ஆழ்ந்து அன்னையை அழைத்தால் ஆழ்ந்த நிம்மதி ஏற்படும், தீராது. ஆத்மாவிலிருந்து அன்னையை அழைக்க முடியாதவர்,



என ஏமாற்றத்துடன் பேசுவார். ஆத்மாவிலிருந்து அன்னையை அழைத்தால் அமைதி பேரமைதியாகும். அடாவடிக்காரனால் தீங்கு வாராது, திட்டமாட்டான், பிரச்சினை தீராது. அவன் நமக்குச் செய்யும் தீங்கு நாம் அன்னையை ஆத்மாவிலிருந்து அழைக்கும்

வாய்ப்புஎன்று தெளிவுபட்டால், உடனே அவனுடைய ஆத்ம நியாயம் செயல்படும், பிரச்சினை தீரும்.

✡ *பிரம்மம் ஜீவனாகி, ஜீவன் ஜீவியமாகி, ஜீவியம் சக்தியாகி, சக்தி ரூபமாகிறது. ரூபம் சுயரூபமாவது மனிதன். ரூபத்திற்கு பாவம் உண்டு. பாவம் ரூபத்திற்குரியது. சுயரூபத்திற்குரியது சுயபாவம். நாம் சுபாவம்என்கிறோம். பிரம்மம் ஏற்படுத்தியது ஒரு ஜீவன். அது புருஷன். சத்புருஷன். பரமாத்மா எனப்படும். பரமாத்மா பல ஆயிரம் ஜீவாத்மாக்களாயிற்று. ஒவ்வொரு ஜீவாத்மாவும் பெறவேண்டிய அனுபவம் பிரம்மத்திலுள்ள வித்தான அனுபவம். அவை அனந்தம். ஒவ்வொரு ஜீவாத்மாவும் பெறவேண்டிய அனுபவத்தை அதன் சுபாவமாகக் காண்கிறோம்.*

சுபாவம் அகத்திற்குரியது. புறத்திற்குரியது சந்தர்ப்பம். அது இந்தச் சுபாவத்தைத் தீண்டும் சந்தர்ப்பம்.

சுபாவமும், சந்தர்ப்பமும் சந்திப்பது செயல்.

✡ செயல் அனைவருக்கும் பலன் தருவது நியாயம்.

✡ அனைவருக்கும் பலன் தரும்படி சக்தி முழுமையாகி, செயலை நடத்தி, நியாயம் வழங்குவது அன்னைசக்தி.

✡ ஜீவியத்திலிருந்து சக்தி எழுமிடத்தில் பிறந்தவர் அன்னைஎன்பதால், ரூபம், பாவத்திற்கு முந்தையவர் அன்னைஎன்பதால், அன்னைசக்திக்கு அனைத்துச் சுபாவமும் கட்டுப்படும்.

✡ இது அன்னைசக்தி செயல்படும் வகை.

உணர்வால் செயல்படும்பொழுது, தாம் செயல்படுவது தவறுஎனத் தெரியாது. அறிவுக்குத்தான் தெரியும். பிறருக்குத் தெரியும். பிறர் அதையே செய்யும்பொழுது நமக்கு நம் தவறு தெரியாது:



✡ உணர்வுஎன்றால் காதால், கண்ணால், உடலால், ருசியால், மணத்தால் உணர்வது. உணர்ச்சிக்குத் தொடவேண்டும். ஸ்பரிசம் பிடித்தால், நல்லது; பிடிக்காவிட்டால் கெட்டது.

✡ அறிவு உணர்ச்சியைக் கடந்ததை அறியும். நம் பார்வையிலில்லாத நிகழ்ச்சியைப்பற்றிக் கேட்டு அறியும்.

✡ நாம் 8 மணிவரை தூங்கினால் தூக்கம் இதமாக இருக்கும், பிடிக்கும். சரிஎன்று மனம் கூறும். நாம் எழுந்தபிறகு வேறொருவர் தூங்கினால், அது தவறுஎன்று மனம் கூறும். நாமும் பலமுறை எட்டு மணிவரை தூங்குகிறோம்என்பது உணர்ச்சியன்று, நினைவு. அறிவுக்குரிய நினைவு.

- ❀ அடுத்தவர் தூங்குவதைக் காண்பது அறிவன்று.
- ❀ அறிவால் புரிந்துகொண்டால், அவனும் நம்போலத் தூங்குகிறான் என நினைப்போம்.
- ❀ அவன் தூங்குவது எரிச்சல் தருவது உணர்வு.
- ❀ அவனைத் திட்டுகிறோம்.
- ❀ ஏனெனில், உணர்விலிருந்து செயல்படுகிறோம்.
- ❀ பிறர், 'உனக்குப் புத்தியிருக்கா? நீயும் அப்படித்தானே தூங்குகிறாய்?'என்பது நாம் உணர்விலிருந்து செயல்படுகிறோம், அறிவிலிருந்து செயல்படவில்லைஎன்றாகிறது.
- ❀ உணர்வால் செயல்படுவதுஎன்றால் புலன்களால் செயல்படுவது.
- ❀ அறிவால் செயல்படுவதுஎனில் மனத்தின் புத்தியால் செயல்படுவது என்பதாகும்.
- ❀ பஸ்ஸில் 15 பேர் இடித்துக்கொண்டு ஏறுவது உணர்ச்சி.
- ❀ 4 பேரானாலும் வரிசையாக நின்று ஏறுவது அறிவு.
- ❀ மனிதனுக்கு அறிவால் செயல்படும் நிலை முழுவதும் வரவில்லை.
- ❀ பிறர் விஷயத்தில் அறிவு வருகிறது.
- ❀ தன் விஷயத்தில் அறிவு செயல்படுவதில்லை.

- ❀ தன் விஷயத்திலும் முக்கியமான நேரம் அறிவு செயல்படாது.
- ❀ *உணர்வால் எந்த நேரமும் பாதிக்கப்படாத அறிவே அறிவு.*
- ❀ நாம் பேசும்பொழுது வாதம் எழுந்தால் அடிக்க எழுவதில்லை.
- ❀ அடிக்க எழுபவன் உடலால் செயல்படும் மனிதன்.
- ❀ உடலால் செயல்படுபவன் அடிக்க எழுவதுபோல் உணர்வால் செயல்படுபவனுக்கு உணர்ச்சி எழுகிறது.
- ❀ உணர்வால் பாதிக்கப்படாத அறிவு, அறிவுஎனப்படும்.

அது பகுத்தறிவாகும்.

தான் பெற்ற பேறு முதலில் தெரியும். பிறகு அதை (take it for granted) வழக்கமாகக் கருதுவான். இன்று 3000 ரூபாய் பென்ஷனில் இருக்க வேண்டியவன் 75,000 ரூபாய் செலவு செய்வது மாறிய நிலைஎன மனம் உணராது. இது தான் பெற்ற அதிர்ஷ்டம்என அறியமாட்டான்:

- ✡ தான் பெற்றதை அறியாதது, தான் இழந்ததை அறியாதது மனிதச் சுபாவம்.
- ✡ பெற்றது, இழந்தது இரண்டும் கடந்தகாலத்திற்குரியன.
- ✡ வெறும் மனிதனும், ரிஷியும் நிகழ்காலத்திற்குரியவர். அவர்கள் இருவருக்கும் கடந்ததோ, வருவதோ நினைவிருக்காது.
- ✡ ரிஷி கண்டத்துள் அகண்டத்தைக் காண்பது நிகழ்காலத்தில் தன்னை இழப்பது.
- ✡ மனிதன் கடந்ததை மறந்து, வருவதைக் கருதாதிருப்பது உணர்வில் வாழ்வதாகும்.
- ✡ 'இருப்பதைப் பேசு, இல்லாததை ஏன் பேசுகிறாய்'என்பது அவர்கள் பாஷை.
- ✡ நன்றியறிதல்என்பது கடந்ததை நினைப்பது.



- ✡ ரிஷிக்கு ஆன்மீக நன்றியறிதல் எழுந்தால், அவர் காலத்தின் மூன்றாம் நிலைக்கு வருவார்.
- ✡ வெறும் மனிதனுக்கு நன்றியறிதல் ஏற்பட்டால் உணர்விலிருந்து அவன் அறிவுக்கு வருவான்.
- ✡ கடந்ததை மறக்காமல் மனிதன் வெற்றிகரமாகச் செயல்படமுடியாது.
- ✡ நடப்பதை நடத்துவதற்குப் போதுமான தெம்பு வரவேண்டுமானால், கடந்ததை நினைக்கக்கூடாது. அதனால் சக்தி விரயமாகும்.
- ✡ ரிஷி கடந்ததை நினைவு வைத்திருப்பதன்மூலம் காலத்துள் காலத்தைக் கடந்ததைச் செயல்படச் செய்து, மூன்றாம் நிலை காலத்திற்கு வருவார்.
- ✡ மனிதன் unconsciousஆக இருக்கிறான், consciousஆக வேண்டும்.
  உள்ளதைக் காப்பாற்ற unconsciousஆக இருப்பது அவசியம்.
  மனிதனுக்குத் தெம்பு குறைவு.
  கையில் உள்ள வேலையைச் செய்யவே தெம்பு போதாது.
  பழையதை நினைத்தால் உள்ள தெம்பு குறையும்.
  தெம்பு குறைந்தால் வேலை கெடும்.
  உள்ள வேலையை கெடாமல் முடிப்பதற்கு மனிதன் பெற்றதையும், இழந்ததையும் மறந்தால்தான் முடியும்.
- ✡ 75,000 ரூபாய் செலவாகும் வீட்டில் 5000 ரூபாய் குறைந்தால் கூச்சல் எழும். இது 3000 ரூபாய் இருக்கவேண்டிய இடமாயிற்றேஎனத் தோன்றாது.
- ✡ 4000 கோடி டெப்பாசிட் இருந்த பாங்குகளில் 75,000 ரூபாய் நிலுவை இருப்பதும், 1200 ஆயிரம் கோடி டெப்பாசிட் இருப்பதும் பெரிய விஷயம்என்பது இன்று யாருக்கு நினைவிருக்கிறது? உணர்வு வாழும் வகையிது. This is vital life.

தானிழந்த வாய்ப்பை ஏற்றவன் கவர்னராக இருக்கும்பொழுது தாம் கல்லூரியில் ஆசிரியராக ஓய்வுபெற்றது பெரிய நஷ்டம்என்பது உணர முடிவதில்லை. இருப்பதே யதார்த்தம்என்பது மனிதன்:

✡ ஒரு விஷயம் நடப்பதற்குமுன் புரிவது கஷ்டம்.

✡ நடந்தபின் எவரும் சுலபமாகப் புரிந்துகொள்வர்.

✡ IAS பரீட்சைக்கு அந்த நாளில் ரூ.80/- கட்டணம். தகப்பனார் யார் என்று கேட்டால் ரோடு மேஸ்திரிஎன்று பதில் கூறவேண்டும் என்பதால் IAS பரீட்சை எழுத மறுத்தார். எழுதாதவர் மலை; எழுதியவர் மடு. மடு பின்னர் கவர்னரானார், ஜனாதிபதியாகவும் நியமிக்கவேண்டும் என்றனர். 1934, 1935, 1936இல் தரிசனம் செய்ததால் IAS வாய்ப்பு 1948இல் வந்ததுஎன இவர் அறியார். தரிசனத்தால் வந்ததுஎன்றாலும் சொந்த பர்சனாலிட்டி சிறியதானதால் IAS வாய்ப்பு அதுவரை வரவில்லை. 1947இல் பரநலமான சேவையை எடுத்துக்கொண்டதால் வாய்ப்பு வந்தது. வாய்ப்பை உரியவர் ஏற்காவிட்டால், தகுதியுள்ளவர் அருகிலிருந்தால் அவருக்குப் போகும். இவருடைய சேவையைப் பாராட்டியவர் IAS வாய்ப்பைப் பெற்றுக் கவர்னரானார்.

'கல்லூரிப் பேராசிரியராக தாம் ஓய்வுபெற்றது நஷ்டம். தமக்கு வந்த வாய்ப்பை இழந்தோம். அதைப் பெற்றவர் நம்மை கவர்னராக இருக்கும்பொழுதும் பாராட்டுகிறார். அதனால் மேலும் உயர்கிறார்' என்பதை இழந்தவர் அறியவில்லை. இது நடந்தது எவ்விதம்?

❀ தரிசனம் வேலையில்லாதவருக்கு வேலை வாங்கிக் கொடுத்தது.

❀ வேலை வந்தபின் தரிசனம் மறந்துவிட்டது.

❀ பர்சனாலிட்டி இலட்சியமும், சிறிய புத்தியும் கலந்தது.

❀ இலட்சியம் செயல்பட்ட இடத்தில் உச்சாணிக்குப் பலன் உயர்ந்தது.



❀ தரிசனம் பெற்றபின் தரிசனம் மறந்ததுபோல் இலட்சியம் பலித்தபின், பலித்ததற்குக் காரணமாக இருந்தவரை சிறிய புத்தியால் முயன்று விலக்கியதால், வந்த வாய்ப்பு முயன்று விலகியது.

❀ 40 ஆண்டுகட்குப்பின் கவர்னர் அன்பரைப் பார்க்கப் பிரியப்பட்ட பொழுதும் அன்பரால் கவர்னரைப் போய் சந்திக்க முடியவில்லை.

❀ 'தகப்பனார் செய்த வேலை IAS செலக்ஷனுக்குத் தடையாகும், தம் திறமைக்குப் பலனிருக்காது'என நம்பியதால், நம்பியது பலித்தது.

❀ எந்தச் செயலுக்கும் physical plane ஜடஉலகம் ஒரு காரணமாயிருக்கும்.

பணம் 80/- ரூபாய் கட்டவேண்டும். அது ஒரு மாதச் சம்பளம். பிற்காலத்தில் கவர்னராகும் வாய்ப்பை நிர்ணயிப்பது 1 மாதச் சம்பளத்தைக் கட்டணமாகச் செலுத்த மனம் வாராதது.

❀ எந்த வாய்ப்பையும் நடத்திவைக்கும் சந்தர்ப்பமும், தடுக்கும் சந்தர்ப்பமும் ஒருங்கே எழும்.

  ✰ தம் இலட்சியத்தைப் பூர்த்திசெய்தவருக்குரிய கடமை வாய்ப்பைப் பூர்த்திசெய்யும் சந்தர்ப்பம்.

  ✰ 1 மாதச் சம்பளம் கட்டணமாகச் செலுத்த மனம் வாராதது தடுக்கும் சந்தர்ப்பம்.

❀ இன்று நாம் செயல்படும்பொழுது வரும் பெரிய ஆன்மீக, சமூக வாய்ப்புகட்கு இதுபோன்ற இரு எதிரான சந்தர்ப்பங்கள் எழுவதைக் காணலாம்.

Our choice determines.

மலைபோல வந்தாலும் அதைத் தனக்குரியஅளவில் குறுக்கிக் கொள்வதை மனம் உணராது:

✡ 'நாழி முகவாது நானாழி'என்பது மனிதனுக்குரிய சட்டம்.

✡ குறுக்குவது எப்படி?

✡ வருவதும், நடப்பதும் இரு செயல்கள்.

✡ அவை நம் வாழ்வில் சந்திக்கின்றன.

✡ வருவதனுடன் ஓர் சிறு நிகழ்ச்சியும், நடப்பதற்குரிய ஒரு சிறிய நிகழ்ச்சியும் சேர்ந்துவரும்.

✡ நாம் எந்த நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுக்கிறோமோ அது நடைபெறும்.

✡ அருளைத் தாங்கிவருபவருக்குரிய கடமை ஒருபுறம், இருளின் பிரதிநிதிக்குரிய பாசம் மறுபுறமிருந்தால், நாம் தேர்ந்தெடுப்பதுபோல் காரியம் முடியும்.

✡ பெருமையும், உண்மையும் எதிரெதிராக நிற்கும்.

✡ கொடுமை செய்யும் ஆசையும், கடமையைச் செய்யும் சந்தர்ப்பமும் இணைந்து நிற்கும்.

✡ மனம் உணராதது, மனம் unconsciousஆக இருப்பதாகும்.

✡ மனம் intuition முனைந்து செயல்பட்டால் இரு சந்தர்ப்பங்கள் வரும்.

✡ *மனம் ஆரம்பிக்காவிட்டால் அன்னைசக்தி செயல்படும்.*

✡ வேலைக்காரி, தனக்கு ஒரு வாய்ப்புண்டுஎன்று தெரியாததால், அவள் மனம் செயல்படவில்லை. பெரியவனுக்குப் புதுடிரஸ் வேண்டும், கோயம்புத்தூருக்குக் காரில் போகவேண்டும்என்று தோன்றுகிறது. எலிசபெத்திற்கு பெம்பர்லியில் டார்சி இல்லைஎன்பதால் போகத் தோன்றியது. வீட்டைப் பார்த்தபின் 'நான் இதன் தலைவியாகி இருக்கலாம்'என்ற நினைவு எழுந்தது. அவளை நோக்கி அருள் வரும்பொழுது அருள் செயல்படும் சந்தர்ப்பத்தை அவள் மனம் நினைப்பதால், அருள் செயல்படுகிறது.

✡ மனம் ஏற்பட்டபின் சிருஷ்டியில் பரிணாமத்திற்குரிய சந்தர்ப்பங்கள் எழுந்தபடியிருக்கின்றன. அவை எவர் கண்ணிலும் படுவதில்லை. அதனால் அந்தச் சந்தர்ப்பங்கள் அழிந்துவிடுகின்றன. ஒரு சந்தர்ப்பத்திற்கு மனித ஒத்துழைப்பிருந்தால், அது பசுமைப்புரட்சிபோல் பெரியதாக வளர்ந்து நாட்டின் போக்கையே மாற்றிவிடுகிறது. சர்ச்சில் பதவியிலில்லாதபொழுது மக்கள் சர்ச்சிலைப் பதவிக்குக் கொண்டுவர முயன்றதால், அது நடந்தது, போரை வெல்லமுடிந்தது.



✡ 1947 ஆகஸ்ட் 15இல் சுதந்திர நாள் குறிக்கப்பட்டது தெய்வ அருள். கட்டுப்பட்டிகட்கு அது நல்ல நாளில்லை. அதனால் 12 மணிக்கு சில நிமிஷம்முன்னால் பார்லிமெண்ட் கூட ஏற்பாடு செய்தார்கள். நேரு அவர்களைத் தடுக்கவில்லை. அதுவே அடுத்த மாதம் 1 கோடி பேரை அகதியாக்கியது.

✡ நம் வாழ்வில் அதுபோன்ற இரட்டைச் சந்தர்ப்பங்களை அன்றாடம் காணப் பயில்வது ஆன்மாவைக் காண்பது. சரியானதைத் தேர்ந்தெடுப்பது அன்னையை நாடுவது.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறப்பில் தாயைவிட்டுப் பிரிக்கும் இனம்போலவோ, செடியைப்போலவோ மனிதன் வளருவதில்லை. உணர்வால் குடும்பமும், வாழ்வால் சமூகமும், அதன் ஸ்தாபனங்களும் மனிதனுக்கு உயிரையும், உதவியையும் அளிக்கின்றன. ஏதோ ஒரு சமயம் ஒரு சமூகத்தினருக்கு அல்லது ஒரு ஊரிலிருப்பவருக்கு உலகிலில்லாத ஆதரவு வரும். தனி மனிதரோ, ஸ்தாபனமோ முன்வந்து உதவுவதுண்டு. தம்மை நாடி வருபவர்க்கு அன்னை இந்த விசேஷ ஸ்தாபனங்கள்போல் உதவுகிறார். தாமே அவர்களுடைய இஷ்டதேவதையாகி அன்பையும், ஆதரவையும் வழங்குகிறார்.

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**857) இன்று மனிதன் இறைவனுக்கு எதிர் நிலையிலிருக்கிறான். கடவுளை நோக்கி அவன் செல்வது ஆர்வம்எனப்படும்.**

*இறைவனை இதயம் நாடுவது பக்தி.*

- ✡ மனிதச் செயல் திருவுள்ளத்திற்கு எதிரானது.
- ✡ திருவுள்ளத்தை ஏற்றால் பாரதியார்போல் நடக்கவேண்டும்.
- ✡ கழுதைக்குட்டியின் அழகுக்கு முத்தமிடுவதும், கட்டியுள்ள வேட்டியை பிச்சைக்காரனுக்குக் கொடுப்பதும் திருவுள்ளமாகும்.
- ✡ திருவுள்ளம் உலகில் செயல்பட்டால், பிட்டுக்கு மண் சுமக்க வந்தாலும், இறைவன் தூங்குவான், வேலை செய்யமாட்டான்.
- ✡ இறைவன் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பமாட்டான்.
- ✡ நிலத்தைப் பயிரிடமாட்டான்.
- ✡ அவனுக்குக் கடமையில்லை; நாம் அதை ஏற்கமுடியாது.
- ✡ இறைவனுடைய போக்கு, மனிதனுடைய கடமைக்கு எதிரானது.
- ✡ மனிதன் இறைவனுக்கு எதிராக இன்று செயல்படுகிறான்.
- ✡ மனிதன் இறைவன் போக்கை ஏற்றால் வாழ்க்கை ஸ்தம்பித்துவிடும்.
- ✡ இறைவனுடைய போக்கில், மனிதனுடைய கடமைகளை ஆற்றுவது, பிள்ளையைக் கறி சமைப்பதுபோலவும், கத்தியால் குத்தியவனை காப்பாற்ற முனைவதும், மனைவியைப் பரதேசிக்கு அளிப்பதுபோலவும் ஆகும்.
- ✡ பௌத்தனும், சமணனும் மாமிசம் சாப்பிடுவதுபோலிருக்கும்.
- ✡ இறைவன் காலத்திற்கு ஒவ்வாதவன்.



- ✡ காலத்தைக் கடந்தால் மனிதனில்லை.
- ✡ காலத்துள் கடந்தவன் வந்து செயல்படும் திருவுள்ளம் இன்றில்லை.
- ✡ அதை அற்புதம், பூலோகச் சொர்க்கம், பிரம்ம ஜனனம் என்கிறார் அன்னை.
- ✡ அதிவேகமாகச் செயல்படும் அனாதிகாலத்துப் பொறுமையது.
- ✡ அறிவுக்கேற்ற நம்பிக்கை எனப்படும்.
- ✡ அன்பால் எழும் அதிகாரம்என்பது பகவான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கம்.
- ✡ பக்தி ஞானவிகாசமாகும் கட்டம் அது.
- ✡ விபசாரியின் கற்பைப் போற்றும் உலகம் அது.
- ✡ கொடுமையின் கருணையை அறியும் இதயம் அத்திருவுள்ளம்.

❀❀❀

**858) தவறு, குறை, தீமைஎன்பவை பரிணாமத்தின் பல நிலைகள் என்கிறார். நீயே அதுவானால் அல்லது அதன் பகுதியானால் அது வேதனையாகிறது. வெளியிலிருந்து பார்த்தால் அது மாறுதலில் ஒரு நிலைஎனத் தெரிகிறது. நீயே அதுவாயிருந்து ஜீவியம் உயர்ந்தால், அவை அற்புதங்களாக மாறுகின்றன.**

*ஜீவியம் உயர்ந்தால் தவறு, குறை, தீமை அற்புதங்களாக மாறும்.*

- ✡ உலகில் எந்த நாட்டிலும், இதுவரை நம் நாட்டிலும் தீமைஎன்பது என்னஎன்று எவரும் கூறவில்லை.
- ✡ நம் நாட்டில் தீமையை தீமைஎன ஏற்கிறார்கள்.
- ✡ கிருத்துவர்கள் தீமை நரகத்திற்கும், நன்மை சொர்க்கத்திற்கும் அழைத்துப்போகும் என்கிறார்கள்.
- ✡ துஷ்டநிக்ரஹம்என்பது அவதாரங்களின் கடமைஎன்பது இந்திய மரபு.

- ✡ **கடவுள் ஏன் தீமையைப் படைத்தார்என்பதற்கு இதுவரை பதிலில்லை.**
- ✡ **சிருஷ்டி எப்படி ஏற்பட்டதுஎன்பதே தெரியாததால் அடுத்த கேள்வி எழாது.**
- ✡ **ஸ்ரீ அரவிந்தம் தீமை படைக்கப்படவில்லைஎன்கிறது.**
- ✡ **அகந்தையும், மேல்மனமும் தீமையை அறிகின்றன. அடிமனம் தீமையை நன்மையாக அறிகிறது.**
- ✡ **முழுமையான பிரம்மம் பகுதியான மனிதனாகி, அகந்தையில் சிறைப்பட்டு, மீண்டு வரும்பொழுது பகுதிக்கு வலி தெரிகிறது. தீமை அதன் வழிவந்ததே.**
- ✡ **பகுதியான மனிதனுக்கும் வலியில்லை. பகுதி அகந்தைக்கு உட்பட்டால் மீளும்பொழுது வலி ஏற்படுகிறது.**
- ✡ **தீமையில்லைஎன நாம் எப்படிச் சொல்லமுடியும்? பகுதி மீளும்பொழுது வலி ஏற்படுகிறதல்லவா?**
- ✡ **சிருஷ்டி ஆனந்தலீலை.**
- ✡ **ஆனந்தம் அதிகப்பட அதை இழந்து மீண்டும் பெறவேண்டும்.**
- ✡ **இழக்காமல், உள்ளதை இழக்காமல், உள்ளது பெருகாது.**
- ✡ **பெருக்கத்தின் முதல் நிபந்தனை நஷ்டம்.**
- ✡ **உபரியான ஆனந்தம் எழ பயிற்சி தருவது உள்ளது மறைவது.**
- ✡ **பயிற்சியானால் வலிஎன்பது உண்டல்லவா?**
- ✡ **பயிற்சியை எதிர்த்தால் வலியுண்டு.**
- ✡ **பயிற்சியை ஏற்றால் வலியில்லை.**
- ✡ **அகந்தையுள் அடங்குவது அவசியம்என்ற ஞானம் வலியை ஆனந்தமாக்கும்.**
- ✡ **வலிமட்டுமன்று, எதையும் நாடும் சுதந்திரம் மனிதனுக்குண்டு என்பதால், மனிதன் வலியை நாடுகிறான்.**



- ✡ **வலிய மனிதன் வலியை நாடாவிட்டால், தீமையைத் தேடாவிட்டால், மனித உலகில் வலியும், தீமையும், தாவரத்திற்கும், விலங்கிற்கும் இல்லைஎன்பது போலிருக்காதுஎன்பது ஸ்ரீ அரவிந்தம்.**

❀❀❀

*தொடரும்.....*

## ஜீவிய மணி

**ஒற்றுமை வேற்றுமையாகத் தெரிவது வாழ்வு.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

குழப்பம், சந்தேகம், பூர்த்தியாகாத ஆசை, வன்மம், அறிவுத்தாகம் ஆகியவை மௌனம் நிரந்தரமாவதைத் தடுக்கும். அவற்றை அனுபவித்துத் தீர்த்துவிடவேண்டும். அல்லது மனஉறுதியால் விலக்கிக் கரைக்கவேண்டும்.

***அனுபவம் தீர்க்கும்; உறுதி விலக்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் ஆரம்பத்தை இழக்கவேண்டுமெனில் அது மௌனத்தால் நிரம்பியும், அதன் அமைப்பை இழந்தும் நிற்கவேண்டும். அந்நிலையில் (the force) சக்தி மௌனத்தைச் சந்தித்து அதில் கரைந்துவிடும்.

***மௌனம் நிறைந்த மனம் சக்தியில் கரையும்.***

**It cannot be Supramental power where cure is shortlived.**

**குணமானது நீடிக்கவில்லையெனில் அது சத்தியஜீவிய சக்தியில்லை.**

- ✡ வியாதி குணமாவது பெரியது. தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ குணமாகும்.
- ✡ வியாதியின் வேரை அறுத்தால் நிரந்தரக் குணம் உண்டு.
- ✡ வேர் நம் குணத்திலிருக்கும். அதன் அடையாளங்கள் உடலில் தெரியும். தோலில் கொப்புளம் வந்தால், வேர் இரத்தத்திலிருக்கும். மேலே ஒரு ointment களிம்பு தடவினால் கொப்புளம் அடங்கும். ஆனால் மீண்டும் வரும். இரத்தசுத்திக்காக மருந்து சாப்பிட்டால், பிறகு வாராது. வியாதி இரத்தத்தைக்கடந்து மனத்தில் குணமாக இருந்தால், இரத்தம் சுத்தமானபின், மீண்டும் அசுத்தமாகி கொப்புளம் வரும். குணம் மாறினால், இரத்தம் மீண்டும் அசுத்தமாகாது, கொப்புளம் வாராது.
  - ❀ களிம்பு (ointment) கொப்புளத்தை ஆற்றும்.
  - ❀ இரத்தசுத்திக்கு டானிக் சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும்.
  - ❀ ஆயுர்வேத மருந்துகளை 1 மண்டலம் சாப்பிட்டால், அது மனத்தையும் மாற்றும். ஆயுளுக்கும் வியாதி வாராது.
- ✡ சத்தியஜீவிய சக்தி நம் மனத்தையும், ஜீவியத்தையும் மாற்றுவதால், அது மீண்டும் வாராது.
- ✡ அன்னைசக்தி, சத்தியஜீவிய சக்தி.



- ✡ பள்ளியில் 10 வகுப்பு இருந்தாலும், 5ஆம் வகுப்புடன் பையன் நின்றுவிடுவதைப் பள்ளிக்கூடம் தடுக்கமுடியாது.
- ✡ சத்தியஜீவிய சக்தியால் T.B. குணமானால், அது ஜீவியத்தையே மாற்றிவிடும். மீண்டும் வாராது. இருமல் நின்றவுடன் அன்னையை விட்டு அகன்றால், அல்லது நாம் அன்னையை ஜாகத்தின்மூலம் பெற்றால், ஓரளவு குணமாகும். பிறகு வரும். ஜாதகம் பார்த்து, அது குணமாகும்என்று சொன்னபின், அன்னையை அறிந்து, குணமானால் அது ஜாதகத்தில் உள்ள நம்பிக்கைமூலம் பலிப்பதால், அன்னைசக்தி முழுவதுமாக இருக்காது.
- ✡ நமக்குப் போன வியாதி திரும்ப வந்தாலும், போன பிரச்சினை மீண்டும் வந்தாலும், நாம் அன்னையை நேரடியாகப் பெறவில்லை. ஜாதகத்தின்மீதுள்ள நம்பிக்கைமூலம் பெறுவதுபோல், நமது முருகர் பக்தி மாறி அன்னை பக்தியானால், நாம் அன்னையை முருகர்மூலம் பெறுகிறோம்எனப் பொருள்.
- ✡ நமக்கே அன்னைமீது பக்தி ஏற்படாமல், பலரும் அன்னையைக் கும்பிடுவதால் நாமும் வணங்கினால், நம்மை அன்னைசக்தி மற்றவர் நம்பிக்கைமூலம் வந்தடையும். அதாவது அவர்கட்குள்ள பக்தி அளவே வரும். அவை அளவுக்குட்பட்டதாக (லிமிட்) இருக்கும்.
- ✡ சத்தியஜீவிய சக்தியால் போன பிரச்சினை மீண்டும் வாராது.
  - ❀ இதைச் சரிவர நம் ஆழத்தில் பெற்றால் பிரச்சினை வாய்ப்பாக மாறும்.
  - ❀ அக்கண்ணோட்டத்தில் கணவனும், மனைவியும் ஒருவருக்கு மற்றொருவர் ஏற்பட்ட உயர்ந்த வாய்ப்பு.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அடக்கம் பலஹீனமன்று. உத்தமனுடைய வலிமை அடக்கம். பரம்பொருளின் முன், தான் சூன்யம்என்ற ஞானம் அடக்கம்.

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIII. The Divine Maya

Page No.120
Para No.18

We work through our mentality.
It is governed by appearances.
The original power is something beyond.
It is behind these appearances.
But it is immanent.
To the Mind, it can only be an inference.
Mind can only vaguely feel it.
We perceive a law.
It is a law of cyclic progress.
Therefore we infer an ever increasing perfection.
It is somewhere foreknown.
It is an approximation.
Everywhere we see a Law.
It is founded in Self-being.
It has a rationale of its process.
We can penetrate into it.
That Law expresses an innate knowledge.
It is inherent in existence.
It expresses itself.



## 13. தெய்வீக மாயை

நாம் மனத்தால் செயல்படுகிறோம்.
மனம் தோற்றத்தை ஏற்கிறது.
ஆதிசக்தி அதைக் கடந்தது.
அது தோற்றத்தின் பின்னாலுள்ளது.
அது உலகினுள் மறைந்துள்ளது.
மனம் அதை நேரடியாகக் காணமுடியாது.
மனம் அதைத் தெளிவாக உணர முடியாது.
ஒரு சட்டம் உள்ளது.
அந்தச் சட்டம் மீண்டும் மீண்டும் வரும்.
அதனால் அதன் சிறப்பு வளரும்என அறிகிறோம்.
எப்படியோ நாம் அதை அறிவோம்.
அது தெளிவற்றது.
எங்கும் இந்தச் சட்டம் தெரிகிறது.
அது ஜீவனிலுள்ளது.
அது செயல்படுவதற்கு ஒரு சட்டம் உண்டு.
நாம் அதை ஊடுருவலாம்.
சட்டம் அடிப்படை ஞானத்தை வெளிப்படுத்துகிறது.
அது சத்தில் உள்ளது.
அது தன்னை வெளிப்படுத்தும்.

It is implied in the force that expresses.
It is a Law developed by knowledge.
The motion is directed.
It is directed towards a divine goal.
It allows of a progression.
Our reason too seeks to emerge out of the drift.
Reason tries to dominate the drift.
It is a drift of our mentality.
Reason is only a messenger.
We perceive it.
There is a greater consciousness.
Reason represents it.
It is its shadow.
The greater consciousness is beyond reason.
It has no need to reason.
It is all.
It knows all that it is.
Reason has a source.
It is identical with the knowledge.
That knowledge acts as Law in the world.
This knowledge is sovereign.
It knows what it has been.
It knows what it is and will be.
It is so, because it cognises itself.
That cognition is external and infinite.
Being is infinite consciousness.
Infinite consciousness is omnipotent force.
It creates a harmony of itself.
That is how it makes the world.
The world is its object of consciousness.



வெளிப்படும் சக்தியில் அச்சட்டம் உண்டு.
ஞானம் வளர்த்த சட்டம் அது.
இச்சலனத்திற்கு ஒரு போக்குண்டு.
அது இறைவனின் இலட்சியத்தை நோக்கிப் போகும்.
போக்கு வளரக்கூடியது.
அறிவும் இக்குழப்பத்தைவிட்டு வெளிவர முயல்கிறது.
குழப்பத்தை மீற அறிவு முயல்கிறது.
அது நம் மனப்போக்கு.
அறிவு கருவியன்று, கருவியின் தூதுவன்.
நாம் அதைக் காண்கிறோம்.
அது உயர்ந்த ஜீவியம்.
அறிவு அதன் பிரதிநிதி.
அறிவு அதன் நிழல்.
உயர்ந்த ஜீவியம் அறிவைக் கடந்தது.
அதற்கு அறிவு தேவையில்லை.
அதுவே எல்லாம்.
அது தன்னை முழுவதும் அறியும்.
அறிவுக்கு ஆதியுண்டு.
அதுவும் ஞானமும் ஒன்றே.
அந்த ஞானம் உலகின் சட்டம்.
இந்த ஞானம் சுயம்பிரகாசமானது.
தான் எதுவாக இருந்ததென்று அது அறியும்.
இப்பொழுது எப்படியிருக்கிறது, இனி எப்படியிருக்கும்எனவும் அறியும்.
அது தன்னை அறியவல்லது.
சுயஞானம் முடிவற்றது, காலத்தைக் கடந்தது.
ஜீவன் அனந்தஜீவியம்.
அனந்தஜீவியம் எல்லாம்வல்லது.
அது தன்னுள் சுமுகத்தை ஏற்படுத்துகிறது.
உலகம் அப்படி சிருஷ்டிக்கப்பட்டது.
உலகம் அதன் ஜீவியத்திற்குப் புறம்.

**So, the world is seizable by our thought.**
**It is a cosmic existence.**
**It knows its own truth.**
**It realises the truth in forms.**
**Those forms it knows.**

**Page No.120**
**Para No.19**

**Our mind is limited.**
**It can react.**
**So the Mind can only imperfectly grasp the Truth.**
**The other consciousness is the higher consciousness.**
**It can become really manifest to us.**
**It lies in the secrecy of mental stillness.**
**To reach there we have to go deep into ourselves.**
**And we must cease to reason.**
**Reason is a pale, flickering light.**
**It can uncertainly conceive of the Reality.**
**Ceasing to Reason we can know it.**
**It can increase in illumination.**
**Knowledge waits beyond mind.**
**It is beyond intellectual reasoning.**
**Its self-vision is illimitable.**
**It is luminous.**
**Knowledge is seated there.**

***The end.***

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**பிரார்த்தனையும், காணிக்கையும் சேர்ந்து சேவையாகிறது.**



**எனவே உலகம் அதற்குப் புரியும்.**
**அது பிரபஞ்சம்.**
**அது தன் சத்தியத்தை அறியும்.**
**அச்சத்தியத்தை ரூபத்தில் காண்கிறது.**
**அது அந்த ரூபத்தை அறியும்.**

**மனம் சிறியது.**
**எரிச்சல் படக்கூடியது.**
**சத்தியத்தை மனம் அரைகுறையாகவே அறியவல்லது.**
**நாம் கூறும் ஜீவியம் உயர்ந்த ஜீவியம்.**
**நம்மால் அதை உணரமுடியும்.**
**மனம் நிச்சலனமானபொழுது அந்த இரகஸ்யம் வெளிப்படும்.**
**நாம் ஆழ்ந்து உள்ளே சென்றால் அதைக் காணலாம்.**
**நாம் சிந்திக்கக்கூடாது.**
**அறிவு பிரகாசமற்ற அலைபாயும் ஒளி.**
**சத்தியத்தை விவரமற்று அறியும்.**
**சிந்தனை நின்றால், நாம் அதை அறியலாம்.**
**அதன் ஜோதி அதிகப்படும்.**
**ஞானம் மனத்தைக் கடந்து காத்திருக்கிறது.**
**அது பகுத்தறிவின் ஆராய்ச்சியையும் கடந்தது.**
**அதன் சுயதிருஷ்டிக்கு அளவில்லை.**
**அது பிரகாசமானது.**
**ஞானம் அங்கு கொலுவீற்றிருக்கிறது.**

*முற்றும்.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**மேலே போகும்பொழுது சைத்தியப்புருஷன் அன்னையாகும்.**
**கீழே வரும்பொழுது அன்னை சைத்தியப்புருஷனாகும்.**

## அன்பர் கடிதம்

**பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும், ஸ்ரீ அன்னைக்கும் அனந்தகோடி நமஸ்காரங்கள்!**

ஸ்ரீ அன்னையை என் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு சில மாதங்கள்தான் ஆகிறது. ஸ்ரீ அன்னை என் வாழ்வில் பல அதிசயங்களையும், பல அற்புதங்களையும் செய்துவருகிறார்கள். சிலவற்றை எழுத ஆசைப்படுகிறேன்.

*1) இருதய நோயால் பாதிக்கப்பட்ட என் சகோதரிக்கு டாக்டர்கள் ஆப்பரேஷன் செய்யவேண்டும்என்று கூறியவுடன் மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டிக்கு ஒரு வியாழக்கிழமை எழுதிய கடிதத்திற்கு அடுத்த வியாழக்கிழமை டாக்டர்கள் ஆப்பரேஷன் தேவையில்லைஎன்று டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள்.*

*2) என் தங்கைக்கு திடீரென்று எம்பிளாய்மெண்ட் ஆபீஸிலிருந்து வேலைக்கான தேர்வு எழுதச்சொல்லி, ஸ்ரீ அன்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் வேலையும் வாங்கி கொடுத்துவிட்டார்கள்.*

சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை என்னால் மறக்கமுடியாமல் எழுதுகிறேன்.

7.5.2005 அன்று நடந்தது. சில நாட்களுக்கு முன்னர் எங்கள் வீட்டில் நடந்த ஒரு ஃபங்ஷனுக்கு (பெண் வீடு பார்ப்பது) உறவினர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். என் வீட்டில் இருக்கும் அல்ட்ரா கிரைண்டரில் மாவு அரைக்கும்போது உறவினர் ஒருவர் அதைப் பார்த்து அதன் விவரங்களைக் கேட்டார். நானும் சொன்னேன். அடுத்த முறை அதில் இட்லிக்கு மாவு அரைப்பதற்காக உளுத்தம் பருப்பைப் போட்டேன். கிரைண்டர் ஓடவே இல்லை. எத்தனையோ முறை முயன்றுபார்த்தும் சுத்தமாக ஓடவே இல்லை. என்ன செய்வது என்று யோசித்தபொழுது,



அப்பா அவர்கள் இண்டியன் எக்ஸ்பிரஸில் அன்று எழுதிய மெசேஜ் (message) திடீரென்று ஞாபகம் வந்தது. உடனடியாக நானும்,

**IN THE NAME OF THE MOTHER**

**FOR THE SAKE OF THE MOTHER**

என்னும் அன்னையின் மந்திரத்தை பயபக்தியுடன் கூறினேன். சொல்லி முடித்தவுடன் என் கண்களையே என்னால் நம்பமுடியாதஅளவிற்கு கிரைண்டர் உடனடியாகச் சுற்ற ஆரம்பித்துவிட்டது. என்னால் ஸ்ரீ அன்னைக்கு நன்றிகூட சொல்லமுடியாதஅளவிற்கு திணறிவிட்டேன். அன்னைக்கு இதை நன்றியுடன் எழுதுகிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நாலு பேர் வெட்கப்படுதலுக்குரிய காரியத்தை மீறிச் செய்பவர்களுண்டு. வெட்கத்தை மீறும் அளவுக்கு அக்காரியத்தை அனுபவிப்பதில் சந்தோஷமும், மனதிற்குள் பெருமையும் ஏற்படுவதால் மனிதன் அதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகிறான். இது சிற்றின்பம். தெய்வத்தை மனம் நாடும்பொழுது, அதுபோல் வெட்கத்தை மீறி மனிதன் செயல்படுவதுண்டு. அந்த வெட்கமே அவனுக்குப் பெருமையளிக்கக்கூடியதாகவும் இருக்கும். வெட்கத்தை ஆனந்தமான பெருமையாக்கும் திறன் பக்தியின் உச்சக்கட்டத்தில் ஏற்படும்.

***மீறி எழும் பக்தி வெட்கத்தை மீறி வரும்.***

## P.56 Suggested a million renderings to the Mind.

**மனத்தின் இலட்சம் இலட்சியங்கள்.**

- ✡ உலகம் அதனால் ஒரு இலட்சியம் பெறும்.
- ✡ ஐயத்தில் எழுந்த யூகம்.
- ✡ குழப்பமான எண்ணம், தவறாகப் புரிந்த செய்தி.
- ✡ பேசுமிடத்தில் தவறும் இலட்சியம்.
- ✡ பிரபஞ்சச் சொல்லின் ஒரு துளி.
- ✡ பெரிய இரட்டை எழுத்துகளை அர்த்தமற்றதாக்குகிறது.
- ✡ உத்தரவின்றி நடுவிலுள்ள சின்னம் மாறியது.
- ✡ புதிரான பிரபஞ்சம்.
- ✡ முக்காலம் நிகழ்காலமானதுபோல்.
- ✡ மீண்டும் எழும் சுழற்சி.
- ✡ சூன்யத்தைச் சுற்றிவரும்.
- ✡ மறைந்துள்ள சிருஷ்டியில் பொதிந்துள்ள அர்த்தம்.
- ✡ பிரபஞ்சத்தைப் பிரித்தெடுத்துப் படிப்பதுபோல்,
- ✡ தெரியாத அக்ஷரம் சின்னமாக நோக்கும்.
- ✡ புதுமொழியால் திரையிடப்பட்ட நிலை.
- ✡ விளங்காத அற்புதச் சின்னம்.
- ✡ உன்னதக் கதையின் ஒரு பகுதி.
- ✡ அழியும் ஜந்துவின் நேத்திரம்.
- ✡ அர்த்தமற்ற அதிசயம் ஆர்ப்பாட்டம் செய்கிறது.
- ✡ வாழ விரும்பி தன்னை அழித்துக்கொள்ளும்.



- ✡ கடலைக் காணாத நதி.
- ✡ காலத்தின் விளிம்பில் வாழ்வாகவும், மரணமாகவும் ஓடும்.
- ✡ மீண்டும் சேரும் தவிர்க்கமுடியாத அவசியம்.
- ✡ இரவில் எழும் தீயின் பயங்கரத் தழல்.
- ✡ பிரிந்தது எதிராயிற்று.
- ✡ இரவும், பகலும்போன்று பிரிந்தவை.
- ✡ எழுந்த பெரிய விரிசலை நாம் பூர்த்தி செய்யவேண்டும்.
- ✡ தனித்து முடிந்த மெய்யை மீண்டும் தீண்டவேண்டும்.
- ✡ அனந்தத்தின் உயிர் அதிகாரம் தரும்.
- ✡ மனத்தையும், ஜடத்தையும் இணைக்கும் கோடு.
- ✡ மேலெழும் ஆத்மாவின் குறுகிய கடலோரம்.
- ✡ இருப்பின் இரகஸ்யத்தை இணைக்கவேண்டும்.
- ✡ இழந்த புனிதத்தை இதயம் அழைக்கிறது.
- ✡ பொருத்தமான சொல்லெழுந்து சேர்க்கும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பரிணாம வளர்ச்சியின் முதல் ஸ்பரிசத்தைப் பெறுவது, நம்முள் உள்ளவற்றில் மிக உச்சகட்டத்திலிருப்பதாகும். உதாரணமாக நம்மில் மனம் வளர்ச்சியை விரும்பும். பிராணனோ, உடலோ விரும்பாது. சமூக அந்தஸ்தில் உயர விரும்புவது மனம். மனம் விரும்புவதால் உடல் உழைக்கிறது.

***நம் உச்சக்கட்ட திறமை இறைவனின் ஸ்பரிசத்தை முதலில் பெற்று உடலை உழைக்கச் சொல்கிறது.***

# ரிக்ஷா மாரி

**சமர்ப்பணன்**

மழை தூறிக்கொண்டிருந்தது. ரிக்ஷா மாரிக்குச் சீக்கிரமாகச் சவாரி கிடைத்தால் தேவலைபோலிருந்தது. இப்போதே மணி சாயந்திரம் ஆறாகிவிட்டது. காலையில் சாப்பிட்ட நீராகாரம் எவ்வளவு நேரம் தாங்கும்?

நமக்கெல்லாம் வறுமைஎன்றால் என்னவென்று நன்றாகத் தெரியும். எத்தனை சினிமாக்களில் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்! எத்தனை வறுமைஒழிப்புத் திட்டங்களைப் பற்றிப் பேப்பரில் நுணுக்கமாகப் படித்திருக்கிறோம்!

ரிக்ஷா மாரிக்கு சினிமா போக காசில்லை. டீக்கடையில் தமிழ்ப் பேப்பர் எழுத்துக்கூட்டிப் படிக்கும்அளவுக்குக்கூட சரஸ்வதி கடாட்சம் இல்லை. அதனால் அவனுக்கு வறுமை தெரியாதுஎன்று அர்த்தமில்லை. அனுபவபூர்வமான வறுமையையே அனுதினமும் வாழ்க்கை முறையாகக் கொண்டவன் ரிக்ஷா மாரி.

மாரிமுத்துஎன்ற அவன் இயற்பெயர் பல வருடங்களாக ரிக்ஷா மிதித்ததால் ‘ரிக்ஷா மாரி’என்ற காரணப்பெயராக மாறிவிட்டது. அதுதவிர, அவனுக்கு ‘கேப்மாறி, மொள்ளமாரி’என்ற செல்லப் பெயர்களும் உண்டு.

“ஏண்டா, ரிக்ஷா வருமா?” கணீரென்ற குரல் அரைமயக்கத்தில் இருந்த ரிக்ஷா மாரியை உலுக்கி எழுப்பியது.

ஏகவசனம் சிறிது ரோஷத்தைக் கிளப்பினாலும், வந்த சவாரியையும், இரவு உணவையும் விட மனமில்லாமல், ‘டா’வைப் பொறுத்துக்கொண்டான் ரிக்ஷா மாரி.

கம்பீரக் குரலுக்குரியவர் கதர் வேட்டி, கதர்ச் சட்டை போட்ட சிவபாலன். அவருக்கும், அரசியலுக்கும் தினசரி பேப்பரைத்தவிர வேறு எந்த சம்பந்தமும் இல்லைஎன்றாலும், அவரது உடை பிறரது பயஉணர்வை தூண்டி, மரியாதையைப் பெற்றுத்தந்ததால், அடாவடியாகப் பேசுவதும், அஞ்சாத சிங்கமாய் நடந்துகொள்வதும் அவருக்குப் பிடித்தமான விஷயங்கள் ஆகிவிட்டன.

கூடவந்தவர் மெலிந்த தேகத்துடன், சபாரி போட்ட வங்கி அதிகாரி இராமநாதன்; புத்தகப்புழு, அறிவுஜீவி; எந்தப் புத்தகத்தையும் தலைப்பு முதல் முற்றும்வரை முழுமையாகப் படித்துவிடுவார். படித்ததைப் பிறருக்கு எடுத்துச்சொல்வதில் நிபுணர். ‘அது அடுத்தவருக்குமட்டுமே பொருந்தும்’ என்ற தளராத கொள்கைப்பிடிப்பு உள்ளவர்.

இருவர் கைகளிலும் பெரிய பெரிய பைகள். அவற்றில் வகை வகையான பூக்களும், ஊதுபத்திக் கட்டுகளும் இருந்தன.

“போகலாம் சார், ஏறுங்க”என்று தன் அழுக்குத்துண்டால் ரிக்ஷா இருக்கைகளைத் தட்டி சுத்தப்படுத்தினான் ரிக்ஷா மாரி.



“ஜெயலட்சுமி கல்யாண மண்டபம் போகணும். எவ்வளவு வேணும்?” என்று அதட்டினார் சிவபாலன்.

“பதினைஞ்சு ரூவா ஆகும் சார்”என்றான் ரிக்ஷா மாரி.

“என்னடா, உன் ரிக்ஷாவுக்கும் சேர்த்து சொல்றியா?”என்று பிளிறினார் சிவபாலன். அவரது திவ்யமான நகைச்சுவையைக் கேட்டு இராமநாதன் புன்னகைபூத்தார்.

முகம் சிறுத்துப்போன ரிக்ஷா மாரி, “நீங்களாப் பார்த்து ஏதோ போட்டுக்கொடுங்க சார்”என்று உடனடியாக பசி நிறுத்த சமரசத் திட்டத்தை அறிவித்தான்.

“சரி, சரி”என்ற சிவபாலனும், இராமநாதனும் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டனர். அவர்கள் நனையாமல் இருக்க மேல்படுதாவை எடுத்துப் போட்ட ரிக்ஷா மாரி, தன் தலையில் ஒரு பிளாஸ்டிக் பையை – அது அவன் ‘ரெயின் கோட்’டாம் – மாட்டிக்கொண்டு வண்டியை மிதிக்கலானான்.

“சிவா சார், எத்தனை மணிக்கு சொற்பொழிவு ஆரம்பம்?” இராமநாதன் கேட்டார்.

“அது ஏழு மணிக்குத்தான். ஆனா, வரவேற்புரை ஆறரைக்குச் சரியா ஆரம்பிச்சிடும். நேரம் தவறவேக்கூடாது. மதர் விஷயமாச்சே” என்றார் சிவபாலன்.

“கரெக்ட்”என்றார் இராமநாதன்.

இராமநாதனின் பை நிறைய நாகலிங்கப்பூக்களைக் கவனித்த சிவபாலன், “ஏன் ராமு சார், உங்களுக்குமட்டும் எப்படி இவ்வளவு கிடைக்குது?”என்று கேட்டார்.

“நம்ம வீட்டுப் பக்கத்திலே கார்ப்பரேஷன் விளையாட்டு மைதானம் தெரியுமில்லையா? அங்கே ஒரு பெரிய நாகலிங்கமரம் இருக்கு. அதிலே இருந்துதான் கிடைக்குது”என்றார் இராமநாதன்.

“அவங்க ஒண்ணும் சொல்றதில்லையா? வேற யாரும் எடுக்கிறது இல்லையா?”என்று கேட்டார் சிவபாலன்.

“நாகலிங்கப்பூன்னா செல்வவளமாச்சே! அவனவன் ஆளாய் பறக்கிறான். காவல்காரனுக்கு மாசம் இருநூறு ரூபாய் சுளையாக் கொடுக்கிறேன். அப்பப்ப காபி செலவுக்குவேற கொடுப்பேன். இப்ப எல்லாப் பூவும் நமக்குத்தான். வேற ஒரு பய மரத்துமேல கைவைக்க முடியாதே”என்றார் இராமநாதன்.

“இருநூறு ரூபாய் ரொம்ப ஜாஸ்தி சார்”என்று கருத்து தெரிவித்தார் சிவபாலன்.

“என்ன சார் செய்யறது? முதல்ல அம்பது ரூபாய்தான் தர்றதாச் சொன்னேன். காவல்காரப்பய பேராசைக்காரன். அப்புறம் ‘இப்படியெல்லாம் விக்கக்கூடாது’ன்னு கார்ப்பரேஷன் சட்டம்வேற இருக்காமே! அதனால்தான் இருநூறு கொடுக்க சம்மதிச்சேன்”என்று தன்னிலை விளக்கம் கொடுத்தார் இராமநாதன்.

“சட்டத்தைவிட மதர் முக்கியம்னு நம்ம குருவே எழுதி இருக்காரே”என்று இராமநாதனின் நடவடிக்கையை ஆமோதித்தார் சிவபாலன்.

ரிக்ஷா மாரிக்கு அப்போது பார்த்துதானா திடீரென்று பேசத் தோன்ற வேண்டும்?

“ஏன் சார், மத்தவங்களும் பூ எடுத்துக்கிட்டா எல்லாருக்கும் நல்லதுதானே”என்று அப்பாவியாகக் கேட்டான்.

“ரோட்டைப் பார்த்து ஓட்டுடா, அதிகப்பிரசங்கி”என்று உறுமினார் சிவபாலன்.

கோபம் வந்தாலும் இயலாமையில் எழுந்த மௌனத்தோடு வண்டி மிதித்தான் ரிக்ஷா மாரி.

“பார்த்தீர்களா சார், ஹாஸ்டைல் ஃபோர்ஸ் வேலையை”என்று ரிக்ஷா மாரிஎன்கிற தீயசக்தியின் உண்மைச் சொரூபத்தைக் கண்டுபிடித்து சிவபாலனுக்கு விழிப்புணர்வு தந்தார் இராமநாதன்.

‘‘நம்ம புத்தகச்சேவை ஜானகிராமன் புதுவீடு கட்டிட்டாராம். அடுத்த மாதம் கிரகப்பிரவேசம்’’என்று முக்கியத் தலைப்புச்செய்திகள் வாசித்தார் சிவபாலன்.

“அவருக்கு எப்படி இவ்வளவு பணம் வந்ததுன்னு தெரியுமா சார்?”என்று கேட்டார் இராமநாதன்.

“ஊரில் ஏதோ நிலத்தை வித்து, படாத பாடுபட்டுக் கட்டினதாச் சொன்னார்”என்றார் சிவபாலன்.

“அப்பாவி சார் நீங்க”என்று அனுதாபப்பட்ட இராமநாதன், “அவர் கை சுத்தம்னா நினைக்கிறீங்க? அவர் எந்த டிபார்ட்மெண்டில் இருக்கார்னு யோசிச்சீங்களா? அதான் சார் அதிர்ஷ்டத்தின் இரகசியம்” என்று சொன்னார் இராமநாதன். இவர் பரம்பரை பரம்பரையாக வாடகை வீட்டில் வசிப்பவர்.

‘‘அட, இது எனக்குத் தோணாமல் போயிடுச்சே!’’என்று தம் அறியாமையை நொந்துகொண்டார் சிவபாலன்.

“அன்னை பக்தராம். வெளியே சொன்னா வெட்கக்கேடு சார்”என்றார் இராமநாதன்.

மெல்ல மெல்ல பேச்சு களைகட்டியது. தியானமைய பக்தர்கள் அனைவரது அந்தரங்க விஷயங்களும் அம்பலம் ஏற்றப்பட்டன. நடுநடுவே பொருத்தமான ‘மதர் பிரின்ஸிபிள்’ ஆராயப்பட்டது.

பசி மயக்கத்திலிருந்த ரிக்ஷா மாரிக்கு ‘சவாரி’களின் பேச்சு எதுவும் புரியாவிட்டாலும், ‘மதர்ங்கிற சாமிக்குப் பூ கொடுத்தா நல்லது’என்ற போதிமரத்து ஞானோதயம்மட்டும் அவன் மரமண்டைக்குக் கிடைத்தது.

ஜெயலட்சுமி கல்யாண மண்டபத்திற்கு எதிரே இருந்த தியானமையம் வந்துவிட்டது.

சில்லறையாக எட்டு ரூபாயை ரிக்ஷா மாரியின் கையில் திணித்துவிட்டு நடக்கத்தொடங்கினார் சிவபாலன்.

“சார் சார், பார்த்துப் போட்டுக்கொடுங்க சார்”என்று கெஞ்சினான் ரிக்ஷா மாரி.

“என்னப்பா, உன்கூட பெரியதொந்தரவாப் போச்சு”என்ற இராமநாதன் இரண்டு ரூபாயை அவனிடம் கொடுத்துவிட்டு, “அவ்வளவுதான்”என்றபடி நடந்தார்.

✡✡✡

கையில் பத்து ரூபாய் வந்ததும், ரிக்ஷா மாரி உலகத்தையே துச்சமாக ஒரு பார்வை பார்க்க, தெருமுனையில் இருந்த ஒரு மலிவான கையேந்திபவன் கண்ணில்பட்டது.

அது ஏழைகளின் நட்சத்திர உணவுவிடுதி. அங்கே வருபவர்கள் சுவையையும், சுகாதாரத்தையும்விட அளவுக்குதான் முக்கியத்துவம் தருவார்கள்.

ஏழு ரூபாய்க்குச் சாப்பிட்டான் ரிக்ஷா மாரி. அன்லிமிடெட் மீல்ஸ்! விருந்து ஒன்றுமில்லை. விதையாக இருந்த சாதத்தை ஒரு அலுமினியத் தட்டில் கோபுரம்போலக் குவித்து, அதன் நடுவில் பள்ளம் தோண்டி, சாம்பார்என்று அழைக்கப்பட்ட பழுப்புநிறத் தண்ணீரை, பள்ளத்தில் நிரப்பிச் சாப்பிட்டான். இப்படி மூன்று முறை கோபுரம் கட்டி வயிறாரச் சாப்பிட்டான்.

இது நாளை மத்தியானம்வரைகூடத் தாங்கும். மிகவும் நிம்மதியாக இருந்தது.

‘ஏதாவது சவாரி கிடைக்குமா?’என்று நோட்டம் விட்டுக்கொண்டு மீண்டும் தியானமையம் அருகே வந்தான்.

மீதமிருந்த மூன்று ரூபாய் சில்லறை ரிக்ஷா மாரியின் மனதைப் பாடாய்படுத்தியது.

‘மூன்று ரூபாய்க்கு பீடிக்கட்டு வாங்கலாமா? சிகரெட்டும், வாழைப்பழமும் வாங்கலாமா?’என்ற பலத்த சிந்தனையில் ஆழ்ந்தான் ரிக்ஷா மாரி. முடிவு செய்ய முடியவில்லை.



அப்போது மதரைப் பற்றி ‘சவாரி’கள் பேசியது நினைவுக்கு வந்தது. பக்தி, ஆன்மீகம்என்ற அனாவசியமான தொந்தரவுகள் எதுவுமற்ற ரிக்ஷா மாரிக்கு, ‘இந்த மதருக்கு ஒரு ரோஜாப்பூ வாங்கிவைத்தால் என்ன?’என்று தோன்றியது.

அங்கிருந்த பூக்காரனிடம், “அண்ணே, ஒரு செவப்பு ரோஸ் எவ்வளவு?”என்று கேட்டான் ரிக்ஷா மாரி.

“ஒண்ணு ஒரு ரூவா”என்று சிவந்த பெங்களூர் ரோஜாப்பூவை கையிலெடுத்தான் பூக்காரன்.

‘தினம் தினம் பீடி பிடிக்கிறோம். காசு மிஞ்சினா சாராயம் குடிக்கிறோம். இன்னிக்கு எல்லாக் காசுக்கும் பூ வாங்கினாஎன்ன? குடியா முழுகிடும்?’என்று எண்ணமிட்டான் ரிக்ஷா மாரி.

‘சுளையா மூணு ரூவா இருக்கு. காத்தாலே இட்லிக்கும், டீக்கும் ஆகுமே’என்று அறிவே இல்லாத அவன் மூளையிலும் ஒரு யோசனை தோன்றியது.

ரிக்ஷா மாரிக்குள் ஓர் உலகமகாயுத்தம் சில விநாடிகள் நடந்து ஓய்ந்தது.

“அண்ணே, மூணு ரூவாக்கு ரோஸ் கொடுங்கண்ணே”என்று எல்லாச் சில்லறைக் காசுகளையும் பூக்காரனிடம் கொடுத்தான் ரிக்ஷா மாரி.

பூக்காரனுக்கு ரிக்ஷா மாரியைப் பார்க்க பாவமாக இருந்தது. ஐந்து பூக்களைப் பொறுக்கி எடுத்து அவனது கையில் கொடுத்தான்.

“அண்ணே, நான் மூணு ரூவாதான் கொடுத்தேன்”என்று அரிச்சந்திர அவதாரம் எடுத்தான் ரிக்ஷா மாரி.

“ஏழைக்கு ஏழை ரெண்டு பூ இனாம்”என்று பாரிவள்ளல் அவதாரம் எடுத்தான் பூக்காரன்.

ரிக்ஷா மாரி சிவந்த ரோஜாப்பூக்களை எடுத்துக்கொண்டு, தயங்கி தயங்கி தியானமைய வாசலில் நின்றிருந்த துவாரபாலகரை அணுகினான். ரிக்ஷா மாரியைப் பார்த்ததும் அவருக்குப் பகீரென்றது. இவனை ‘உள்ளே விடமுடியாது’என்று சொல்ல முடியாது. தியான மையமாயிற்றே! ஆனால், உள்ளே விடவும் மனமில்லை. இவனைப் பார்த்தாலே பரதேசிப்பயல்என்று தெரிகிறது. தியானமையத்தின் புனிதமே கெட்டுவிடும்.

நல்லவேளையாக துவாரபாலகரை எந்த சத்தியசோதனைக்கும் உட்படுத்தாத ரிக்ஷா மாரி, “சார், இத உள்ளே இருக்கிற சாமிகிட்டே கொடுத்துடறீங்களா?”என்று கேட்டான்.

பெரிய ஆபத்திலிருந்து தப்பியதைப்போலுணர்ந்த துவாரபாலகர், “அதுக்கென்னப்பா, கொடு”என்று வாங்கிக்கொண்டார். ரிக்ஷா மாரி வாசலைவிட்டு வெளியே போய்விட்டான்என்று உறுதியானபின் பூக்களை எடுத்துச்சென்று அன்னை படத்தின்முன் வைத்தார்.

இது ஆன்மீகக்கதைஎன்பதால், ‘அதே நேரம் பிரபஞ்சம் பிளந்தது. அண்டசராசரங்கள் நடுநடுங்கின. தேவர்கள் ரிக்ஷா மாரிமீது பூமாரிப் பொழிந்தனர்’என்று சரடுவிட கதையில் இதுதான் சரியான இடம். ஆனால் மாரி, பாவம், ரிக்ஷாக்காரன்தானே! அப்படிப்பட்ட எந்த பிரளய விபரீதமும் நடக்கவில்லை.

அவன் நெஞ்சுக்குள் ஏதோ இலேசாகப் புரண்டதுபோல் இருந்தது. ‘காசில்லாததால் நாலைந்து நாளாக ‘சல்பேட்டா சரக்கு’ உள்ளே போகவில்லை. அதனால் வந்த வினை இது’என்று நினைத்த ரிக்ஷா மாரி ‘விதியே’என்று தன் ரிக்ஷாவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான்.

✡✡✡

இலேசான குளிர்காற்று சுகமாக இருக்க, கண்களை மெல்ல மூடினான் ரிக்ஷா மாரி.

திடீரென இருள் சூழ்ந்ததுபோலிருந்தது. ‘ஆத்தாடி! இது என்ன இருட்டா, இல்லை, வேறு ஏதாவதா? அமாவாசை இருட்டே வெளிச்சம்னு சொல்லிடலாம்போலிருக்கே!’

தூரத்தில் ஒரே ஒரு மின்மினிப்பூச்சியின் 'மினுக் மினுக்'என்ற வெளிச்சம் தெரிந்தது. வரவர அந்த வெளிச்சம் பெரிதாகிக்கொண்டே வந்தது.

கண்களைத் திறக்கமுடியாதபடி இமைகள் பசைபோட்டு ஒட்டியதுபோலிருந்தது.

'செத்துகித்து போயிட்டமா!'என்ற பயம் தோன்றியது ரிக்ஷா மாரி.

செத்துவிட்டால் ரிக்ஷா என்னஆகும்? 'எவனாவது தள்ளிக்கிட்டு போயிடுவானே!'என்று மலையாக எழுந்த கவலை, ஒளியின்முன் மண்ணாகக் கரைந்தது.

என்ன நடக்கிறதென்றே ரிக்ஷா மாரிக்குப் புரியவில்லை.

சாராயம் குடித்தால் சில சமயம் இப்படி ஏதேனும் 'யோகானுபவம்' ஏற்படுவதுண்டு. அப்போது தொண்டை கமறும், நெஞ்சு எரியும். காரமாக ஊறுகாயோ, கருவாடோ கடித்துக்கொண்டால் முக்தி கிடைத்துவிடும்.

ஆனால், இப்போது நெஞ்சு குளிர்கிறது. தொண்டையிலோ சர்பத் சாப்பிட்டதைப்போல இனிப்பு.

அதே நேரம் மாரியின் தலை வேகமாக விரிந்தது. 'சொட்'டென அவன் தலைமீது ஒரு துளி தண்ணீர் விழுந்ததுபோலிருந்தது.

சற்று நேரத்தில் ஒரே நீலநிற ஒளிவெள்ளம். உடம்பு முழுவதும் தெம்பும், பலமும் பொங்கியது.. 'டெல்லிவரைகூட நிறுத்தாமல் ரிக்ஷா மிதிப்பது சுலபம்'என்று தோன்றியது.

தூரத்தில் வெண்ணிற ஒளிவெள்ளம் தெரிந்தது.

அப்படி இப்படி பராக்குப்பார்க்காமல் நேராக நடந்தால் அதற்குப் போய்விடலாம்.

பேந்த பேந்த விழித்துக்கொண்டு சுற்றிப்பார்த்தான் ரிக்ஷா மாரி. எங்கெங்கும் நீலநிற ஒளி. தூரத்தில் வெண்ணிற ஒளி.

தான்மட்டும் தனியாக நிற்பதை உணர்ந்தான். 'அடடா, ரிக்ஷா இருந்தால், ஒரே மிதியாக மிதித்து வெள்ளை லைட்டை டச் பண்ணிடலாமே'என்று நினைத்தான்.

நெஞ்சின் ஆழத்தில் ஏதோ ஒரு பூ திடீரென நேரங்காலந் தெரியாமல் மலர்வதுபோலிருந்தது.

இனி என்ன செய்வது?

ரிக்ஷா மாரியினுள் தெளிவான உறுதி பிறந்தது. 'நமக்கு இந்த லைட்மட்டும்தான் கதி. எது செஞ்சாலும் இத நினைச்சுக்கிட்டுதான் செய்யணும்'என்று தீர்மானம் செய்துகொண்டான்.

இனி அவன் அனாதை இல்லை.

எத்தனை யுகங்கள் அப்படிக் கழிந்தனவோ!

யாருக்குத் தெரியும்?

✡✡✡

"ஏண்டா"என்று சிவபாலன் மாரியை உலுக்க, கண்களைத் திறந்தான் ரிக்ஷா மாரி.

"என்னடா, கொடுத்த காசுக்குத் தண்ணி போட்டுட்டியா? எத்தனை தடவை கூப்பிடுறது?"என்றார் சிவபாலன்.

"எங்க சார் போகணும்?" ஒரு நிமிடம் எதுவும் புரியாமல் 'திருதிரு'வென விழித்தான் ரிக்ஷா மாரி.

"உன் மாமியார் வீட்டுக்கு"என்று ஜோக்கடித்தார் சிவபாலன். புன்னகைத்தார் இராமநாதன்.

"அதுக்குள்ள மறந்துட்டியா? கற்பனாமேடு போகணும். அதே பத்து ரூபாதான் கொடுப்பேன்"என்று கறாராகச் சொன்னார் சிவபாலன்.



"ஏறுங்க சார். நீங்க மனசார எதக் கொடுத்தாலும் வாங்கிக்கிறேன், கொடுக்காட்டியும் சரிதாங்க"என்று வேறு உலகிலிருந்து பேசினான் ரிக்ஷா மாரி.

"பார்த்தீங்களா சிவா சார். தியானமையம் போயிட்டுவந்ததும் சரியான ரிக்ஷா கிடைக்குது. அப்ப பதினைஞ்சு ரூபா கேட்ட பய இப்ப கொடுக்கலைன்னாலும் சரிங்கிறான்"என்று அன்னையின் அளப்பரிய அருளை நினைத்து, சிலாகித்து, புல்லரித்துப் பேசினார் இராமநாதன்.

"பின்னே, அன்னையோட சக்தின்னா சும்மாவா?"என்று கர்ஜித்தார் சிவபாலன். கையில் ஒரு முரசுமட்டும் கிடைத்திருந்தால், 'கொட்டு முரசே! கொட்டு!'என்று முரசறைந்து வீர முழக்கமிட்டிருப்பார்.

"சரி சரி, ஏறுங்க, காலாகாலத்திலே வீட்டுக்குப்போய் சேரலாம். நாளைக்கு காலைலே எனக்குப் பூச்சேவை. சீக்கிரம் தூங்கணும்"என்று அலுத்துக்கொண்ட இராமநாதன், "லேட்டாப் போனா, அந்தத் திமிர்பிடிச்ச பூக்காரன் வேற யாருக்காவது பூவ வித்திடுவான்"என்று புலம்பினார்.

"அதானே, மதருக்குப்போற பூவோட மகிமையைப்பத்தி மட்டமான ஆளுங்களுக்கு என்ன சார் தெரியும்? இவங்கஎல்லாம் ரொம்ப தாழ்ந்த ஜீவியம் சார்"என்று கூறிக்கொண்டே வண்டியில் ஏறினார் சிவபாலன்.

"அதான் உண்மை. இவங்க தொடர்பாலேயே நமக்கு எல்லா காரியமும் கெட்டுப்போயிடுது" என்றபடி தாமும் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டார் இராமநாதன்.

இவர்கள் பேசியது எதுவும் ரிக்ஷா மாரியின் காதுகளில் விழவில்லை. அந்த பத்து மணி இருட்டில் அவனுக்கு உலகமே வெளிச்சமாக இருந்தது. ஒளியை நினைத்துக்கொண்டே ரிக்ஷாவை உற்சாகமாக மிதிக்க ஆரம்பித்தான்.

**தன்னை உணரத் தொடங்கிவிட்ட ஜடம், தன்னை முழுமையாக மறந்துவிட்ட பிரம்மத்தை ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு மிதிக்கலாயிற்று.**

❀❀❀

*முற்றும்.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசை பூர்த்தியானால் திருப்தி ஏற்படும்.

ஆசையின் தரம் திருப்தியின் தரத்தை நிர்ணயிக்கும்.

ஆசையில்லாவிட்டால் நிறைவு ஏற்படும். அதனால் (consciousness) ஜீவியம் மலர்ந்து இனிமையடையும்.

***ஆசையழிந்தால் ஜீவியம் மலரும்.***

**The consciousness-Force that creates the world does not reveal itself to us.**

**உலகை சிருஷ்டித்த சக்தியை நாம் காண்பதில்லை.**

✡ **குழந்தை பால் சாப்பிடுகிறது, விளையாடுகிறது, தூங்குகிறது. எப்படி பால் வந்தது, தாயார் தன்னைத் தூங்கவைத்தாள், படுக்கவைத்தாள் எனக் குழந்தை அறியாது.**

✡ **நாம் வேலைக்குப் போகிறோம், வண்டி ஓட்டுகிறோம், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். இதுபோல் ஏராளமான காரியங்களைச் செய்கிறோம். வேலை எப்படி வந்தது, வண்டியை யார் செய்தது, ரோடு யார் போட்டது, பள்ளியை நடத்துவது யார்என நாம் ஓரளவு அறிவோம். ஆனால் அவற்றை நாம் கருதுவதில்லை.**

✡ **மூச்சு விடுகிறோம், காற்றேது? நெஞ்சு துடிக்கிறது, தெம்பு எப்படி வந்தது? நிலத்தில் கத்தரிக்காய் எப்படிக் காய்த்தது, சூரியன் ஏன் உதயமானான்என நினைக்க நமக்குத் தோன்றுவதில்லை. உலகை நடத்தும் சக்தி இவற்றின் பின்னாலுள்ளது. தன்னை வெளிப் படுத்துவதில்லை.**

✡ **முக்கியமானவர் வெளியில் நடமாடுவதில்லை. மூலவர் நகருவதில்லை. உற்சவர் வீதிவலம் வருவார். மூலவரே முடிவன்று. மூலம் அதற்குப் பின்னுள்ளது.**

✡ **நமக்கு நினைவு, அறிவுண்டு. அறிவு பின்னணியிலும், நினைவு முன்னேயும் நிற்கும். நாம் அறிவை மறந்து நினைவையே அறிவெனக் கொள்கிறோம்.**

✡ **இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறை செல்வம் முன் தலைமுறைகளைக் கருதாது. கொஞ்ச நாளானால் தெரியாது.**



✡ **செடிக்கு நாம் தண்ணீர் விடுகிறோம், பச்சென இருக்கிறது. வறண்ட காலத்தில் செடிக்கு எவ்வளவு நீர் விட்டாலும் பச்சென இருப்பதில்லை. பூமிக்கடியில் ஈரமிருப்பதால் மேலே பாய்ச்சும் நீர் செடியை வளமாக்கும். நாம் அடிநீரை அறிவதில்லை.**

✡ **உற்சவர் பின் மூலவர், அதன்பின் மூலமான சிவம், சிவபெருமான் overmental god தெய்வலோகத்திற்குரியவர்.**

- ❀ **சத்தியஜீவியம் அதைக் கடந்தது.**
- ❀ **ஜீவியம் அதையும் கடந்தது.**
- ❀ **ஜீவியத்தில், சித்-சக்தி உற்பத்தியாகிறது.**

  **அது தன்னை வெளிப்படுத்துவதில்லை.**
- ❀ **ஜீவியமும் முடிவன்று, ஜீவன் (சத்) அதற்கப்புறமுள்ளது.**
- ❀ **சத் என்பதும் பகுதி. அசத் மறுபகுதி.**
- ❀ **இரண்டும் சேர்ந்தது முழுமை.**
- ❀ **முழுமையைக் கடந்தது மூலம் - அது பிரம்மம்.**
- ❀ **நாம் ஜடத்தை ஜடப்பிரம்மம்எனவும், ஆனந்தத்தை ஆனந்த பிரம்மம்எனவும் கூறுகிறோம். பிரம்மம் கடந்தது. அதை எவரும் நினைப்பதில்லை. அதுவும் தன்னை வெளிப்படுத்துவதில்லை.**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஜகத்குருவான அன்னை மனித உருவில் நம்மைச் சூழ்ந்துள்ளார். நம்மால் அவருக்குச் சேவை செய்ய முடியும். நம் உள்ளத்தைத் தொடுபவர் அவர்.

***சூழ்ந்துள்ள மனிதகுலம் ஜகத்குருவான அன்னை.***

# ஜீவியாஞ்சலி

### *அன்னையே!*

**எண்ணியவை எண்ணியபடியே**
**முடிந்திடவேண்டும்.**
**எண்ணுகின்றவையெல்லாமே நல்லவையாகவே**
**அமைந்திடவேண்டும்.**
**உன்னின் திருவடிகளை என்முன்னேஎன்றும்**
**நிறுத்திடவேண்டும்.**
**உன்னருள் செய்யும் காரியங்களில்எல்லாம்**
**ஒளி வீசவேண்டும்.**
**அம்மா உன் கருணை இவ்வருடத்தில்பொங்கி**
**நிறையவேண்டும்.**
**அம்மையே அப்பனே உங்கள் சத்தியஜீவியஒளி**
**இன்றிலிருந்து**
**என்றென்றும் எல்லோருடைய ஆன்மாவில் தங்கி**
**என்றும் வழிகாட்டிட உன்னன்பு துணை**
**செய்யவேண்டும்.**
**தாயே உன் காலடிகளில் சரணடைகின்றேன் - என்**
**தாயே நீ என்னுள் நின்று நிலவவேண்டும்.**

- ம



# What is Spirituality in Daily Life?

Spirit is for the tapasvi, life is for the householder is our tradition. Our tradition is religious. Thousands of people accepting one's realisation of the Spirit is religion, as monarchy accords the divine right to rule over the nation to the royal family. Each man discovering his own Spirit is spirituality, as in democracy each one is entitled to rule the nation. Martin Luther thus pleaded for the individual's spiritual illumination, eliminating the priest who is the intermediary. Is it possible for each one of us to become a saint? Modern technology has brought the great benefits of scientific discovery in the shape of newer products to every consumer. So also with spirituality. Its benefits can be availed of by everyone, if not the ultimate illumination.

Stated simply, any situation poses the alternatives of Truth and Falsehood. To choose the alternative of Truth is spirituality in that situation. Stated otherwise, any work can be done with interest making it alive or executed as a dead routine. One is spiritual whereas the other is not. Spirituality in life comes to us as values of honesty, loyalty, integrity, diligence, sincerity, industry, truthfulness, dynamism, etc. Dedicated work, intelligent reading, faithful friendship, responsible work at home, careful handling of materials, attention to people, etc. lead to self-reliance, self-respect, and individuality. If such people invoke the Spirit, it readily responds.

Office employees who are devoted to their work often evoke the jealousy of co-workers. Devotion is Spiritual. Such spiritual people rarely get into trouble in their career. Only when they are in great good luck, the co-workers succeed in giving them untold trouble. **To them the Spirit readily responds when called.** Without exception they are lifted far higher than their present position because of overcoming these obstacles. They see that obstacles, in practice, are opportunities.

There was a time in our life when the entire community lived every detail of their lives according to a spiritual principle. Every religion works to create a culture where every work will be done religiously — according to Jesus or Koran, etc. What religious life India was familiar with was based on one man's spiritual realisation, a Shankara or Ramanuja. Its basic tenet was karma. **To fashion our entire lives on the basis of inner Spirit is spiritual life.** This

cannot be done religiously, based on a guru's realisation. It must be on our own invocation of spirit.

In a very broad sense the world is more receptive to Spirituality today than a hundred years ago. The respect given to individual lives, the individual human being even when he is an invalid — more so because he is an invalid — is a respect given to his soul. As he is recognised as a Soul rather than a body, the society as well as the government goes out of their way to make his life more livable.

As this is an age-old practice of every society, the question whether it is possible need not be raised. When man sees that the Spirit in life is far more powerful than his mind and is convinced that such a wholesale change is possible, he will not rest on his oars.

In the last three hundred years we see life has moved in terms of comfort, happiness, security, etc., in several stages. In the next thirty years, man can move as many steps further to avail of unthought of facilities issuing out of the new power commissioned into life.

India is a land of Rishis and Spirit.

There awaits it a life of plenty and prosperity.

As long as man does not mistake Spirituality for religious rituals, he will make it.

Spirit is the inner essence, not the outer form.

— *Courtesy:* **New Indian Express.**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**மனத்தின் ஆழத்திற்கு அழைத்துச்செல்வது ஒருநிலைப்படும் மனம். மீதி அனைத்தும் - தியானம், மந்திரம், படிப்பு - அந்நிலைக்கு நம்மைத் தயார் செய்துகொள்வதேயாகும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# மக்கள்தொகை

சுமார் 40 ஆண்டுகளாகப் பெருகிவரும் மக்கள்தொகை பெரிய சாபக்கேடுஎனத் தினமும் கேள்விப்படுகிறோம். சமீபத்தில் அமெரிக்கப் பத்திரிகையொன்று இந்தியாவுக்கும், சைனாவுக்கும் 2030முதல் 2050வரை ஜனத்தொகை வரப்பிரசாதமாக அமையும். அதனால் அவர்கள் வருமானம் பெருகும். சைனா உலகில் முதன்மையான பொருளாதார நாடாகும். அமெரிக்கா இரண்டாவதாகும். இந்தியா மூன்றாவதாகும். அன்று இந்தியர் வருமானம், தலைக்கு,

> $17,300 ஆகும். அது இன்று இத்தாலியின் வருமானமாகும். இன்றைய இந்தியர் வருமானமான $486வுடன் ஒப்பிடும்பொழுது அது 36 மடங்காகும்,

என்று எழுதியுள்ளது. எதிர்காலத்தில் மேலைநாடுகளில் வயதானவர் தொகை அதிகமாகவும், இளைஞர் தொகை குறைவாகவுமாகும். ஆனால், சைனாவிலும், இந்தியாவிலும் இளைஞர் தொகை அதிகப்படுவதால் நாடு அதிக உற்பத்தி செய்து முன்னேறும்எனக் கூறுகிறது.

✡ **சாபம் வரமாவது திருவுருமாற்றம்.**

✡ **சத்தியஜீவிய சக்தி நம் குறைகளை நிறைவாக்கி, கஷ்டங்களை வாய்ப்பாக மாற்றி, சாபக்கேட்டை வரப்பிரசாதமாக மாற்றவல்லதுஎன்பதை மேற்கூறிய கட்டுரை முன்னோடியாக விளக்குகிறது.**

❀❀❀

# M.E. அட்மிஷன்

தம்பி B.E. முடித்திருக்கிறான். M.E. சேர ஆசை. ரிஸர்வேஷன், சிபாரிசு, பணம், இவற்றைத்தாண்டி முற்போக்கு ஜாதி மாணவனுக்கு எப்படி இடம் கிடைக்கும்என்ற வேதனை பையனுக்கு. உடன்பிறந்த சகோதரிக்கு அன்னைமீது அசைக்கமுடியாத நம்பிக்கை. தமக்கையின் நம்பிக்கை தமக்கையுடன் முடிகிறது. தம்பியை எட்டித் தொட்டு, அவனது விரக்தியை எடுக்க உதவவில்லை.

> “தம்பியின் விரக்தியில்லாவிட்டால் அன்னை அருள் எளிதாகச் செயல்படும். அவன் முகத்தைத் தூக்கிவைத்திருக்கிறான். இதையும் தாண்டி அன்னை செயல்படுவாராஎனக் கேட்பது நம்பிக்கையில்லை என்றாகும்”,

எனக் கருதி தம்பி இன்டர்வியூவுக்குப் போகும் நேரம் முழுநம்பிக்கையுடன் தமக்கை அன்னை படத்தின்முன் நின்று பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தவுடன், அன்னையின் மலர்ந்த முகம் படத்திலிருந்து எழுந்துவந்து அவர் தோளைப் பற்றியது. உடல் சிலிர்த்தது. உடலை எல்லாம் அன்னை அன்புடன் அதேபோல் பிடிப்பது தெரிந்து தன்னைமறந்து, தன் பிரார்த்தனையையும் மறந்தார்.

> போன் மணியடித்தது. தம்பிக்கு அண்ணா யூனிவர்சிட்டியில் M.E.இல் இடம் கிடைத்த செய்தி போன்மூலம் வந்தது.

**“நான் எனக்காக, என் தாயாருக்காக, தம்பிக்காகமட்டும் பிரார்த்தனை செய்கிறேன். இது சுயநலம். இனி என் சுயநலம் கரையவேண்டி நான் பிரார்த்திக்கப்போகிறேன்”என்ற முடிவுடன் தமக்கை எழுந்தார்.**

❀❀❀